# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTRE

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 250 | சனி, செப்டம்பர் 02, 2023 | 14 பக்கங்கள்




# அனைத்துலக சமூகம் இலங்கையை நீதியின் முன் நிறுத்த ஏன் தயங்குகின்றது?



# கஜேந்திரகுமார்

## ஏன் இலக்குவைக்கப்படுகிறார்?

துரைராசா ஜெயராஜ்



### சிங்கப்பூர் ஜனாதிபதியாக
### தர்மன் சண்முகரத்னம்

சசிங்கப்பூர் அதிபர் தேர்தலில் 70.4% வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்னம் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!



© 2023 இலக்கு இணையம்

# இலங்கையில் களநிலமைகளை ஆய்வு செய்தார் அமெரிக்க செனட்டர்



இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட்சபை உறுப்பினர் வன் கொலன் அங்கு படைத்துறை கட்டமைப்புக்கள், பொதுமக்களின் அமைப்புக்கள், மலையக தமிழ் மக்கள், இலங்கை அரச தலைவர், மூதலீட்டாளர்கள் உட்பட பலரை சந்தித்து கலந்துரையடியுள்ளார்.

நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் சுதந்திரமான செயற்பாடுகள் முக்கியம் என தெரிவித்துள்ள கொலன், அமெரிக்காவினால் இலங்கைக்கு 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கஜபாகு கடற்படை கப்பலையும் சென்று

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# குறைந்த விலையில் சீனாவின் எரிபொருள் விநியோகம் ஆரம்பம்

சினோபெக் என்ற சீனா வின் எரிபொருள் நிறுவனம் இலங்கையில் தனது வர்த்தக நடவடிக்கைகளை கடந்த புதன்கிழமை (30) ஆரம்பித்துள் ளது. கொழும்பில் முதலாவது நிலையத்தின் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள இந்த நிறுவனம் எரிபொருட்களை லீற்றருக்கு 3 ரூபாய்கள் குறைவான




தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இந்தியாவில் இடம்பெறும் ஜி–20 மாநாட்டை புறக்கணிக்கும் ரஸ்ய–சீன தலைவர்கள்



இந்த மாதம் 9 ஆம் நாள் இந்திய தலைநகர் புதுடில்லியில் ஆரம்பமாகும் ஜி-20 மாநாட்டை தவிர்ப்பதற்கு ரஸ்ய தலைவர் விளமிடீர் பூட்டீனும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீன அதிபருக்கு பதிலாக பிரதமர் லீ குயாங் பங்குபற்றுவார் என சீன தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இந்த தகவல் தொடர்பில் கருத்துக்களை தெரிவிப்பதற்கு இந்திய தரப்பு மறுத்துள்ளது.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அமெரிக்க அதிபர் ஜோ

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தனது பிரதேசங்கள் சீனாவுடன் இணைக்கப்பட்டதற்கு இந்தியா எதிர்ப்பு

சீனா வெளியிட்ட 2023 ஆம் ஆண்டுக்கான புதிய வரைபடத்தில் இந்தியாவின் இரண்டு பிரதேசங்கள் சீனாவுடன் இணைக்கப்பட்டதற்கு இந்தியா தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அக்சாய் சின்



தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மாலி மீதான பொருளாதாரத்தடை ரஸ்யாவினால் முறியடிப்பு



கடந்த 31 ஆம் நாளுடன் காலாவதியாகும் மாலி மீதான பொருளாதாரத்தடையை நீடிப்பதற்கு பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேற்ஸ் ஆகிய நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் ரஸ்யா தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் முறியடித்துள்ளது.

மாலி மீதான பொருளாதரத்தடைகள் மற்றும் ஐ.நாவின் கண்காணிப்பு என்பன எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் வரையிலும் நீடிக்கப்பட வேண்டும் என கொண்டுவந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்தன. சீனா வாக்கெடுப்பில் கலந்துகொள்ள

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# தென்னாபிரிக்காவில் தீவிபத்து - 60 இற்கு மேற்பட்டவர்கள் பலி

தென்னாபிரிக்காவின் மத்திய நகரமான ஜொகனஸ்பேர்க் பகுதியில் உள்ள ஐந்து மாடி கட்டடத்தில் தீ பரவியதால் 60 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 45 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.



இந்த கட்டடத் தொகுதியில் பெருமளவான மக்கள் தங்கியிருந்ததால் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்ற அதேசமயம் மீட்கப்பட்டவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை (31) அதிகாலை 1.30 மணியளவில் தமக்கு தகவல் கிடைத்ததாகவும், அதனை தொடர்ந்து தீயணைப்பு படையினரும், மீட்பு குழுவினரும் அங்கு சென்றதாகவும் அவசர கால உதவிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த கட்டடம் முன்னர் கைவிடப்பட்டிருந்தாலும் பெருமளவான மக்கள் அதில் தங்கியிருந்துள்ளனர். எனவே இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும், தீ விபத்துக்கான காரணம் தற்போதுவரை தெரியவில்லை எனவும் மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலங்கள் அடையாளங்காண முடியாது இருப்பதாகவும், அதில் தங்கியிருந்தவர்கள் ஆவணங்கள் எதுவுமின்றி பதிவு செய்யப்படாத குடியேற்றவாசிகள் என்பதாலும் இறந்தவர்களை அடையாளம் காண்பது கடினம் என தென்னாபிரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சுவீடனிலும் பொருளாதார வீழ்ச்சி

உலகில் ஏற்பட்டுவரும் பொருளாதார வீழ்ச்சியில் தற்போது மேலும் ஒரு ஐரோப்பிய நாடும் சிக்கியுள்ளது. இரண்டாவது காலாண்டு பகுதியில் சுவீடனின் மொத்த உற்பத்தித்துறை 0.8 விகிதத்தால் வீழ்ச்சி கண்டதால் அது பொருளாதார வீழ்ச்சிக்குள் சென்றுள்ளதாக Statistics Sweden என்ற நிறுவனம் கடந்த செவ்வாய் கிழமை (29) தெரிவித்துள்ளது.

நோர்ட்டிக் பிராந்தியத்தில் உள்ள பெரிய பொருளாதார நாட்டின் ஏற்றுமதித்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே இந்த பின்னடைவுக்கான காரணம். பணவீக்கமும் கடந்த



வருடம் அதிகரித்துள்ளது. அதனை தடுப்பதற்காக வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளன. வட்டிவிகித உயர்வு மக்களின் செலவீனங்களை குறைத்துள்ளது. அது பொருளாதாரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மற்றுமொரு ஆபிரிக்க நாட்டையும் இழந்தது பிரான்ஸ்




ஆபிரிக்காவின் மேற்கு கரையில் உள்ள கபோன் என்ற நாட்டில் கடந்த புதன்கிழமை (30) இடம்பெற்ற இரணுவப்புரட்சியை தொடர்ந்து அந்த நாட்டின் அரச தலைவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

1960 ஆம் ஆண்டு பிரான்ஸிடம் சுதந்திரமடைந்த பின்னர் ஓமார் பொன்கோ 2009 ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்து வந்ததுடன், அவரின் மரணத்தின் பின்னர் அவரின் மகன் அலி பொன்கோ அதிபராக பதவியேற்றிருந்தார்.

அவரும் தொடர்ந்து ஆட்சியை தக்கவைத்து வந்ததுடன், பிரான்சுடன் நெருக்கிய தொடர்புகளையும் அவர்கள் பேணி வந்திருந்தனர். கடந்த சனிக்கிழமை(26) அங்கு இடம்பெற்ற தேர்தலில் மூன்றாவது தடவை அலி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டபோதும், அதனை ஏற்க மறுத்த படைத்தரப்பு தேர்தல் முடிவுகளை நிராகரித்ததுடன் அரச தலைவரை சிறைப்பிடித்து ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

படைத்தரப்பு ஆட்சியை கைப்பற்றியுள்ளதாக

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# ஆக்கிரமிப்பிற்கு எதிர்வினை ஆற்ற ஒருங்கிணைய வேண்டும்

## சமூக உரிமைகளுக்கான அமைப்பு

தமிழர் தாயகம் எங்கும் அதிகரித்துள்ள அதி தீவிர பௌத்த பெருந்தேசிய ஆக்கிரமிப்பிற்கு எதிர்வினை ஆற்ற சிவில் சமூகங்கள், அரசியல் தரப்புக்கள், புத்தி ஜீவிகள் மற்றும் பொதுமக்கள் திரட்சியாக ஆக்கிரமிப்பிற்கு எதிர்வினை ஆற்ற ஒருங்கிணைய வேண்டும் என திருகோணமலையை தளமாகக் கொண்ட புழுதி என்ற சமூக உரிமைகளுக்கான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

***கடந்த புதன்கிழமை (30) வெளியிட்டஅதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.***

*திருகோணமலையில்மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மண்டபத்திற்குள் சில பௌத்த பிக்குக்கள் உள்நுழைந்து விகாரை கட்டுவதற்கான அனுமதி வேண்டும் என்று ஆர்ப்பரிக்கின்றனர், மட்டக்களப்பில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் நில நிலைமைகளை ஆராயச் சென்ற சர்வமத தலைவர்களையும் சிவில் சமூக அமைப்பினரையும் பௌத்த பிக்கு தலைமையிலான குழு சிறை பிடித்து தடுத்து வைத்திருந்தனர்.*

*கடந்த சில நாட்களில் கிழக்கில் நடைபெற்ற இரு வேறு நிகழ்வுகளை நாம் செய்தியாக கடந்து செல்ல மெல்ல மெல்ல பழக்கப்படுத்த படுகிறோம். தொடர்ச்சியாக தொல்லியல் அடையாளமுள்ள இடங்களாக இனங்காணப்பட்ட தமிழர் வழிபாட்டிடங்கள் மற்றும் வாழ்விடங்கள் மீதான பௌத்த ஆக்கிரமிப்பு நம்மை திட்டமிட்டு விரக்தி மனநிலைக்குள் தள்ளி ஆக்கிரமிப்பை எதிர்க்க முடியாத மனநிலைக்கு இட்டுச் செல்கிறது.*

*பௌத்த மதகுருக்கள் உள்நுளைந்ததும் அத்தனை பேரும் எழுந்து மரியாதை செய்கின்றனர். இந்த நிலைமை ஆக்கிரமிப்பின் வீரியத்தை வெளியே சொல்ல போதுமானதாகும்.*

*பண்பாட்டு இடங்கள், பொருளாதார கட்டுமானங்கள், வாழ்விடங்கள் என சிங்களம் தனது ஆக்கிரமிப்பை வலுவான மத பின்னணியில் முறைசார் அளவீடுகளின்அடிப்படையில் செயற்படுத்தி வருகிறது. தமிழ்த்தேசிய அரசியல் இந்த ஆக்கிரமிப்புகளிற்கான மறுதலிப்பு நிகழ்ச்சிகளினுள்ளே திட்டமிடப்பட்டு மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. இனமாக திரட்சி கொள்ளும் வகையிலான தயார்படுத்தலை தமிழர் தரப்பு கைக்கொண்டு விடக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு சிங்களம் விரித்த வலைக்குள் நாம் சிக்கியிருக்கிறோம்.*

*ஆக்கிரமிப்பு ஊடாக இன முறுகல் ஒன்றை ஏற்படுத்தி வாக்கு வங்கிகளை சரிசெய்து கொள்ள சிங்கள பெருந்தேசிய கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.*

*இவ்வகையான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு அரசும் அதன் காவல் துறையும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இன முரண்களை கூர்மைப்படுத்தும் செயற்பாடுகளை இல்லாமல் செய்ய உடனடி நடவடிக்கைள் தேவை.*

*தமிழ்த்தேசிய தரப்பு தனது இலக்கை அடைவதற்கான வழிவகைகளை முறையாக கண்டு பிடித்து அதன்படி பயணப்பட வேண்டிய நேரம் இதுவாகும். ஆக்கிரமிப்புக்களுக்கு பதிலிறுக்கும் சம காலத்தில் நமக்கான எதிர்கால வேலைத்திட்டங்களிலும் கவனக் குவிப்பை செய்வதாக வேண்டும்.*

*மயிலத்தமடு பிரச்சினை தொடர்பாக தமிழர் தரப்பு போதிய எதிர்வினைகளை ஆற்றாமல் இருப்பது இதே போன்ற ஆக்கிரமிப்புக்களை தொடர்ந்தும் செய்ய பேரினவாதத்திற்கு மேலும் வாய்ப்பாகிவிடும். ஆக்கிரமிப்பை எதிர்க்கும் தமிழரின் தேர்தல் அரசியல் தரப்புக்கள் அதனை மக்கள் மயப்படுத்தாமல் சிறிய எண்ணிக்கையில் ஆட்களாக சேர்ந்து மிகப்பலவீனமான கவனயீர்ப்பையே செய்கின்றனர்.*

*சிவில் சமூகங்கள், அரசியல் தரப்புக்கள், புத்தி ஜீவிகள் மற்றும் பொதுமக்கள் திரட்சியாக*

*தொடர்ச்சி 12ஆம் பக்கம்*

இலக்கு

# தேசியத்தலைவரின் இறைமை மீதான பிடிவாதம் ஈழமக்களின் பிடிவாதமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நேரம்

ஜி20 உச்சிமாநாடு அதன் தலைமையாக இவ்வாண்டில் விளங்கிக் கொண்டிருக்கும் இந்தியாவில் இம்மாதத்தில் நடைபெறவுள்ள நிலையில் சீனா இந்தியாவின் அருணாசலப் பிரதேசம் அக்சாய்சின் எல்லைப்பகுதிகளைத் தனது வரைபடத்துள் உள்ளடக்கிய புதிய நிலையான வரைபடமொன்றை தனது சீன இயற்கைவள அமைச்சால் ஆகஸ்ட் 28 இல் வெளியிட்டுள்ளது. இது உண்மையற்ற பதிவுகள் என்று வன்மையாகக் கண்டித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கர் அவர்கள் "இந்தியாவின் சில பகுதிகளுடனான வரைபடங்களை முன்வைப்பதன் மூலம் எதிலும் மாற்றம் ஏற்படாது. எமது பிரதேசம் என்பதில் எமது அரசாங்கம் மிகத்தெளிவாக இருக்கும். உண்மையற்ற உரிமைக்கோரல்களைச் செய்வது மற்றவர்களுடைய பிரதேசங்களை அவர்களுடையதாக ஆக்காது" எனவும் எடுத்துரைத்துள்ளார்.

இவ்விடத்தில் மாண்பமை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கு ஈழத்தமிழர்களுக்கு இலங்கைத்தீவில் அவர்களது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இறைமையுள்ள அவர்களின் பிரதேசங்கள் குறித்தும் இதேநிலைப்பாட்டையே ஈழத்தமிழர்களின் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது பிடிவாதமாகக் கொண்டிருந்தார் என்பதை இந்நேரத்தில் எடுத்துரைக்க விரும்புகின்றோம். பிரபாகரனின் உறுதியான நிலைப்பாடான ஈழத்தமிழர்களின் தாயகம் அவர்களுடையது. இறைமையுள்ள தன்னாட்சி ஒன்றின் மூலமே ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்பான அமைதியும் வளர்ச்சிகளும் நடைமுறைச்சாத்தியமாகும் என்பதே, மண்மீட்பு போராக 31 ஆண்டுகள் சீருடை அணிந்த முப்படைகள் சட்டவாக்கம் சட்ட அமுலாக்கம் நிர்வாகம் என்ற ஒரு தேச அரசுக்குரிய அத்தனையும் கொண்ட நடைமுறையரசாக இலங்கைத் தீவுக்குள் இரு அரசுகள் என்ற அதன் இயல்பான வரலாற்று நிலையை உலகுக்கு வெளிப்படுத்தியது. இது பிரிவினையல்ல காலனித்துவத்திடம் இழந்த இறைமையின் மீட்டுருவாக்கம். இந்த மீள் தேசநிர்மாணத்துக்கு உலக அங்கீகாரத்தை ஈழமக்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில், **17.05. 2009** சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினவழிப்பின் மூலமான **146000** ஈழத்தமிழ் மக்கள் தேசமாக இனப்படுகொலைக்கு உள்ளாகும் வரை ஈழமக்கள் வேண்டி நின்றனர். அதன் பின்னர் துப்பாக்கிகள் மௌனித்த நிலையில் சனநாயகப் போராட்டங்களின் வழி இன்றும் அதே அங்கீகாரத்தையே உலகநாடுகள் உலக அமைப்புக்களிடம் வேண்டி நிற்கின்றனர். இதனை இன்றைய ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் மனதிருத்திச் செயற்பட வேண்டும்

ஈழமக்கள் இறைமையுடன் கூடிய தன்னாட்சி உரிமை உள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்திச் சிங்கள அரசபயங்கரவாதம் உருவாக்கிய அதன்படைபல ஆக்கிரமிப்பு மூலமான உயிர், உடைமைகள், நாளாந்த வாழ்வுக்கான இனவழிப்புப் போர் மூலமான இனங்காணக்கூடிய அச்ச வாழ்வில் இருந்து தங்களை ஆயுத எதிர்ப்பின் மூலமாகப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு முறைமைகளை முன்னாள் இந்தியப் பிரதமர் மாண்பமை இந்திராகாந்தி அவர்களே பயிற்சிகள் மூலமும் ஆயுதவழங்கல்கள் மூலமும் தொடக்கி வைத்தார். இந்தியாவே 1983ம் ஆண்டு சிறிலங்காவின் யூலை ஈழத்தமிழின அழிப்பை அடுத்து ஆர்ஜென்டினா மூலம் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஈழத் தமிழர் தேசிய பிரச்சினையை முதன் முதலில் கொண்டு சென்றது. சிறிலங்காவின் இறைமையை மீறி அதீத மனிதாய தேவையில் இருந்த ஈழத்தமிழர்களுக்கு வான் மூலம் உணவு வழங்கலை இந்தியா செய்ததின் மூலம் இந்தியாவை ஈழத்தமிழர்கள் தங்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கான துணையாகக் கருதியே தங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆரம்பத்தில் கட்டி எழுப்பினார்கள். இவற்றினை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் இந்தியா ஈழத்தமிழர்களின் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாக்கும் பிராந்திய வல்லாண்மையாகவே இந்திராகாந்தி அம்மையார் மூலம் உலகுக்குத் தன்னை வெளிப்படுத்தியது. இதனாலேயே அவரது மறைவுக்குப் பின்னரும் ஈழத்தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் பயணத்தில் திம்புப் பேச்சுவார்த்தையை ஈழப்போராளிகள் அனைவரும் ஒருங்கிணைந்து ஏற்றுக்கொண்டனர்.

01. தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்டவர்கள்
02. தமிழ் மக்களுக்கு இனம் காணக்கூடிய தனித்துவமான தாயகம் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்
03. தமிழர் தேசத்திற்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல்
04. சகல தமிழ் மக்களுக்கும் முழுமையான குடியுரிமையும் மற்றும் அடிப்படையான உரிமைகளும் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதுவே திம்புப்பேச்சுவார்த்தை முடிவுகள். இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் இலங்கையில் இனஅழிப்பு நடந்துள்ளது என ஏற்றுள்ள இன்றைய காலகட்டத்திலும் இந்தியா தான் உறுதிப்படுத்திய இம்முடிவுகளின் அடிப்படையில் அரசியல் தீர்வுகளுக்கு உதவுகையிலேயே இந்தியப் பிரதமர் கூறுகின்ற இலங்கையில் தமிழர்களுக்கான கண்ணியமான வாழ்வை இந்தியாவால் உருவாக்க முடியும் என்பது ஈழத்தமிழர்களின் ஏகோபித்த கருத்தாக உள்ளது என்பதை இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது. இவ்விடத்தில் ஈழத்தமிழர்களின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் சுதுமலையில் தங்கள் ஆயுதங்களை இந்தியாவிடம் கையளித்த போது நிகழ்த்திய உரையின் சில பகுதிகள் மீள் நினைவு செய்யப்படுவது இந்தியாவுக்கு ஈழத்தமிழர்களின் முக்கியத்துவத்தை உணர உதவும். "நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய மக்களை நாம் நேசிக்கின்றோம். இந்திய வீரனுக்கு எதிராக நாம் ஆயுதங்களை நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடமிருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதில் இருந்து ஈழத்தமிழர்களின் ஒவ்வொரு உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக் கூறவிரும்புகிறேன். இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கி விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை. •••••••.. தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன. போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை. எமது இலட்சியம் வெற்றி பெறுவதானால் எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும்"

இந்த தேசியத்தலைவர் அவர்களின் உறுதி பிடிவாதம் இன்று இந்தியா அமெரிக்கா சீனா என்ற முக்கோண உலகச்சட்டகத்துள், வளர்ந்து வரும் புதிய உலக அரசியல் ஒழுங்குமுறையில் தீர்வுகாணப்பட வேண்டிய அனைத்துலக பிரச்சினையாக ஈழத்தமிழர் தேசியப்பிரச்சினை புதிய பரிமாணம் பெற்று, எல்லா வல்லாண்மைகளும் ஈழத்தமிழரை அணுகும் இன்றைய நிலையில் ஒவ்வொரு ஈழத்தமிழரதும் எண்ணமாகச் சொல்லாகச் செயலாக உலகுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதே ஈழத்தமிழர் இறைமை பேணப்படும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# அனைத்துலக சமூகம் இலங்கையை நீதியின் முன் நிறுத்த ஏன் தயங்குகின்றது?

சர்வதேச வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோர் தினம் கடந்த புதன்கிழமை *(30)* அனுஸ்டிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு வடகிழக்கில் கவனஈர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மட்டக்களப்பில் கவனஈர்ப்பு பேரணியும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.



'சர்வதேச நீதிப்பொறிமுறையில் எங்களுக்கான நீதியைப்பெற்றுக்கொடு' என்ற தொனிப்பொருளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.இந்த போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

வடகிழக்கு இணைந்ததாக வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவினர் சங்கத்தின் போராட்டம் இன்றைய தினம் மட்டக்களப்பிலும் மன்னாரிலும் இடம்பெற்றது.

இதன் கீழ் மட்டக்களப்பில் இடம்பெற்ற போராட்டத்தில் வடகிழக்கின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பெருமளவான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.



மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து பேரணியானது ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மட்டக்களப்பு காந்திபூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத்தூபி வரையில் சென்றது.அங்கு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிய கொடவின் மனைவி சந்தியா எக்னலிய கொட தலைமையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் ஒளியேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து அங்கு நீதிகோரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தமது உறவுகளின் புகைப்படங்களை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சர்வதேச நீதிகோரிய பல்வேறு பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.



இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக அமைப்புகள்,சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவிக்கும் வகையில் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தின் இறுதியில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கத்தின் அறிக்கை வாசிக்கப்பட்டதை தொடர்ந்து அதனை ஐக்கிய நாடுகள் சபை உட்பட தூதரகங்களுக்கு அனுப்பிவைக்க கடிதங்கள் கையளிக்கப்பட்டன.



உலகிலே அதிகூடிய மனிதர்களை காணாமல் ஆக்கிய நாடுகளின் பட்டியலில் இரண்டாவதாக உள்ள நாட்டிலே வாழ்ந்து கொண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காக 2383 நாட்களாகப் போராடும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆகிய நாங்கள் இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டி நீதி கேட்கிறோம்.

நீதியை அடைவதற்கு, சுதந்திரமான சர்வதேச பொறுப்புக்கூறல் செயல்முறை மட்டுமே போதுமானது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதன் மூலமே நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையும், முந்தைய மனித உரிமைகள் ஆணையாளர்கள், சிறப்புஅறிக்கையாளர்கள்மற்றும்ஐ.நா.செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு உட்பட பல ஐ.நா அதிகாரிகளால் வழிமொழியபட்டதையும் இதில் சுட்டி காட்ட விரும்புகின்றோம்.



ரோம் சாசனத்தில் கைச்சாத்திடாத வடகொரியா, சிரியா, ரஷ்யா, மியன்மார் போன்ற நாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தில் நிறுத்தி நீதி தேட வழிமுறைகளை கண்டறிய முடிந்த சர்வதேச சமூகத்தினால் சிறிய நாடான சிறிலங்காவை நீதியின்முன்நிறுத்த பின்னடிப்பதன் காரணத்தை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அத்துடன் சிறிலங்காவின் பொருளாதார நிலையை சீர்ப்படுத்த முயலும் நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் மீண்டும் ஒரு மனித பேரழிவு, இனவழிப்பு இந்த மண்ணில் நிகழாமையை உறுதிசெய்ய வேண்டும். சிறிலங்கா அரசு ரோம் சாசனத்தில் கைச்சாத்திடுவதை முன் நிபந்தனையாக முன்வைக்க வேண்டும்.



சிறிலங்கா அரசுக்கு அவகாசம் கொடுத்து காலத்தை இழுத்தடித்ததன் மூலம் *180* இற்கும் மேற்பட்ட பெற்றோரை இழந்து "கண்கண்ட நேரடியான சாட்சிகள் 180 பேர்"அழிந்தது தான் மிச்சம்.

உள்ளக பொறிமுறையை எங்கள் மீது திணித்து கால இழுத்தடிப்புக்கு துணை போவதன் மூலம் மிகுதியுள்ள நேரடிசாட்சிகளான எங்களையும் இறக்க விட்டு சாட்சிகள் அழிவதற்கு துணை போகாமல் எங்களின் கோரிக்கையான சர்வதேச விசாரனை ஒன்றின் மூலம் ரிஆர்சி க்கு அல்லது விசேட தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் எங்களுக்கு விரைவான நீதியை பெற்றுத்தர சர்வதேசமும்,ஐ.நா வும் முன்வரவேண்டும் என வடகிழக்கு மாகாண வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

• • •



# கஜேந்திரகுமார் ஏன் இலக்குவைக்கப்படுகிறார்?

**துரைராசா ஜெயராஜ்**

வடக்கு, கிழக்கின் தமிழர் அரசியலைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பெற்றுக்கொண்ட பின்னர், தமிழ் தேசிய அரசியலிலும், சிங்கள தேசிய அரசியலிலும் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நில அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் செயற் பாடுகள், திட்டமிட்ட குடியேற்றங்கள், இராணுவ மயமாக்கல் என சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் அனைத்து ஆக்கிரமிப் புக்களுக்கு எதிராகவும் போராட்டங்கள் பரவல டைந்திருக்கின்றன. இத்தகைய ஆக்கிரமிப்புத் தருணங்களைத் தமிழ் மக்கள் தாமாக முன்வந்து போராட்டத்தில் ஈடுபடாவிட்டாலும், அதற்கு எதிராகப் போராடத் தமிழ் தேசிய மக்கள் முன் னணியிலிருந்து போராட இளைஞர்களும், அக்கட்சியின் செயற்பாட்டாளர்களும், அக் கட்சியை வழிநடத்தும் நாடாளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், செல்வராசா கஜேந்திரனும் களத்துக்கு வந்து விடுகின்றனர். பலமான தம் எதிர்ப்புக்குரலை எழுப்புகின்றனர். இதனால் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களுக்குள்ளும் முடக்கப்பட்டிருக்கிற தமிழர்கள் மீளவும் அநீதிக்கு எதிராகக் குரலெழுப்பும் மனத் தைரியத்தைப் பெற்று வருகின்றனர். இந்தப் போக்கு தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் சிங்கள அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.



தையிட்டி பௌத்த விகாரை அமைப்புக்கு எதிரான போராட்டம், திருகோணமலை நெல்சன் திரையரங்கில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எதிரான போராட்டம், வெடுக்குநாறிமலையில் பௌத்தவிகாரைஅமைப்பதற்கானமுயற்சிகளுக்கு எதிரான போராட்டம், குருந்தூர்மலையில் தமிழர் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டமைக்கு எதிரான போராட்டம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அண்மைக்காலமாக ஜனநாயக வழி எதிர்ப்புப் போராட்டங்களை மக்கள்மயப்படுத்தி வருகின்றது.

சமநேரத்தில்அக்கட்சியின்நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் நாடாளுமன்றத்தில், ஆங்கிலத்தில் ஆற்றும் ஆய்வுமிகு உரை கள் சர்வதேச ரீதியிலும், சிங்களவர்கள் மத்தியிலும் அதிக கவனத்தைப் பெறு கின்றன. களத்தில் உண்மையில் என்ன நடக்கிறது, சிறீலங்கா அரசு இன்றும் தமிழர் தாயகத்தில் என்னென்ன வடி வங்களில் இனப்படுகொலையைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது, இனப்பிரச்சினையின் அடிப்படை என்ன, சிங்கள பௌத்த தேசியவாதம் சிங்கள மக்களை எப்படியெல்லாம் முட்டாளாக்கிவைத்து அரசியல் செய்கிறது, தமிழர்களுக்கான நீதி விடயத்தில் சர்வதேச தலையீட்டின் அவசியம், 13 ஆம் திருத்தத்தை நிராகரிப்பதற்கான காரணங்கள் எனப் பல விடயங்களை தன் உரைகள் மூலம் உலகின் முன் கொண்டுவருகின்றார் அவர். இதனால் சிறீலங்கா அரசு நாடாளுமன்றத்துக்குள்ளேயும், நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், சர்வதேச அரங்கிலும் அம்பலப்பட்டு நிற்கிறது.





எனவேதான் சிறீலங்கா அரசினால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் செயற் பாடுகளை முடக்கும் விதமாக அவரை இலக்கு வைக்கிறது சிறீலங்கா. கடந்த ஆனி மாதத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் நடத்திய மக்கள் சந்திப்புக்குள் அத்துமீறி நுழைந்த சிறீலங்கா இராணுவப் புலனாய்வாளர்கள், அவருக்கு உயிரச்சுறுத்தல் விடுத்ததோடு, தாக்கிவிட்டும் தப்பியோடினர். அந்தச் சம்பவத்திற்குப் பின்னர், அவரை விசாரிக்க வேண்டும் என்பதாகக் கூறி, மிரட்டும் நோக்குடன், கொழும்பிலிருந்து மருதங் கேணி வரை ஒரு கைதி போல அழைத்து வந்தது சிறிலங்கா பொலிஸ்.





அதற்குப் பின்னர் கடந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் கொழும்பில் உள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டினைச் சுற்றிவளைத்த சிங்கள அடிப்படைவாத பௌத்த பிக்கு தலைமையிலான குழு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தது. பௌத்த அடிப்படைவாத நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில ஏற்பாடு செய்திருந்த இந்த சுற்றிவளைப்பில் முதல் நாள் அவர் கலந்துகொள்ளவில்லை. இரண்டாம் நாள் உதய கம்மன்பில தலைமையிலான பல பௌத்த பிக்குகள், சிங்கள அடிப்படைவாதிகள் கலந்துகொண்டு, கஜேந்திரகுமாரின் வீட்டினை சுற்றிவளைத்துப் போராடினர். கொழும்பில் தமிழ் அரசியல்வாதியொருவர் வாழ்வது தேச விரோதக் குற்றம், உடனடியாகவே வெளியேற்றப்பட வேண்டும் என்ற நோக்கில் இடம்பெற்ற இந்தப் போராட்டங்கள், இந்நாடு எவ்வளவு தூரம் இனவாதச்சகதிக்குள் சிக்கிக் கிடக்கிறது என்பதற்கு சரியான எடுத்துக்காட்டு. நடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செய்துவரும் அரசியலும், பாராளுமன்ற உரைகளும் நூறுவீதம் சரியானது என்ற செய்தியை உலகிற்கு உணர்த்தும் மெய்க்காட்சிகள்

• • •

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும் பன்னாட்டுக் குற்றங்கள்

## (International Crimes)

### பகுதி 01

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட காலம் முதல் ஸ்ரீலங்காவைச் சிங்களப் பேரினவாதம் தனது தீராப்பசிக்குள் வீழ்த்தியது. அப்பேரினவாதச் சிநதனையை ஏனைய எந்த சக்திகளும் அழித்துவிடக் கூடாது என்பதைக் கணக்கிலெடுத்து பௌத்த தேசியவாதத்தினை தனது முகமாக்கிக் கொண்டது. அதன்பாற்பட்டு ஸ்ரீலங்காவில் நிறைவேற்றப்பட்ட இரண்டு அரசியலமைப்புக்களிலும் பௌத்த தேசியவாதம் முதன்மை பெற்றதுடன் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற கோசத்தில் இன்று வரை சிங்கள நாசியிசம் இயங்குவதாகப் பல ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருப்பதை நாம் காண்கின்றோம்.

இந்த சிங்கள நாசியிசத்தின் பசிக்குள் தமிழ் மக்கள் இரையாகிவிடக்கூடாது என்பதற்காக உருவாகிய தற்காப்பு ஆயுதப் போர் பல்நாட்டுப் பொருளாதார நன்மைகளுக்கும் பூகோளப் போட்டிக்குள்ளும் சிக்கவைக்கப்பட்டது. எனினும் என்றும் தமது சுயநிர்ணய உரிமையினைத் தமிழர்கள் தாரைவார்க்கமாட்டார்கள் என்பதை ஸ்ரீலங்காவும் பன்னாட்டு வல்லரசுச் சக்திகளும் மிகச் சரியாக விளங்கிக்கொண்டன. அதன் ஒரு வெளிப்பாடாக 1997 செம்டெம்பர் 10ஆம் திகதி விடுதலைப் புலிகள் திருகோணமலையிலுள்ள கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் இல்மனைட் கனியத்தை ஏற்றியிருந்த கப்பலைத் தாக்கியதை நாம் நினைவிற்கொள்ளலாம்.

திருகோணமலை என்பது பூகோள ஒழுங்கில் எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச்சரியாகப் புரிந்துகொண்ட வல்லரசுகள் சுயநிர்ணய உரிமையைத் தாரைவார்க்காத தமிழர்களையும் அவர்களின் தற்காப்புச் சேனையையும் அழித்தொழிப்பதை தவிர வேறு வழியில்லை என்பதைக் கணக்கிலெடுத்திருந்தனர் என்பதை நாம் ஒரு நிகழ்வின் ஊடாக அறியலாம். அந்நிகழ்வானது வோசிங்டன் நிகழ்வு என வரலாற்றில் பதியப்பட்டது.



ஏப்ரல் 2003 இல், ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவடைந்திருந்த நிலையில் எதிர்பாராத அறிவிப்பொன்று வோஸிங்டனில் அமெரிக்காவினால் வெளியிடப்பட்டது. அதாவது ஒக்டோபர் 8, 1997 இல் இருந்து பன்னாட்டுப் பயங்கரவாத அமைப்பாக விடுதலைப் புலிகளை அமெரிக்கா பட்டியலிட்டிருந்ததால் அவர்கள் சமாதானப் பேச்சுக்களில் ஒரு தரப்பாகப் பங்கேற்க முடியாது என அறிவித்தது. இவ்அமெரிக்க அறிவிப்பு சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றிய தரப்புகளுக்கிடையே சமநிலையை பாதித்ததால் சமாதானப் பேச்சுக்களில் சரிவை ஏற்படுத்தும் ஓர் அறிவிப்பாகியது. அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டதால் ஒட்டுமொத்த அமைதிப் பேச்சுக்களும் தடைப்பட்டன.



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வன்**
பன்னாட்டுக் குற்றங்கள் பொத்தக ஆசிரியர்,
பட்டய முகாமைக் கணக்காளர்

ஈழத்தமிழருக்கு சமாதானத்தின் ஊடாக ஒரு தீர்வைப் பெற்றுத்தரும் நோக்கில் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை குழப்ப அமெரிக்க பிரித்தானிய ஐரோப்பிய சக்திகள் விரும்பியதன் பின்னணி என்ன?

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடையும் பட்சத்தில் தமிழர்களின் ஆயுதப்போராட்ட வலு சற்றும்குறையாமல்பாதுகாக்கப்பட்டுவிடுவதுடன் தமிழர் தாயகத்தின் இறையாண்மையை அச் சக்தி மறைமுகமாகப் பாதுகாத்து நிற்கும் என்பதைப் புரிந்துகொண்ட வல்லரசுச் சக்திகள் இராணுவத் தீர்வின் ஊடாக தமிழர்களின் ஆயுதப் போராட்ட வலுவையும் அதற்கு ஆதரவாயிருக்கும் மக்கள் சக்தியையும் அழித்தொழித்துவிட வேண்டும் என்ற திட்டத்தை வகுத்துக்கொண்டன.

தமது பன்னாட்டு வழங்கல் செயற்பாட்டிலிருந்த கப்பல்கள் அடுத்தடுத்து அடையாளங்காணப்பட்டு அழிக்கப்பட்ட போது இந்த விடயத்தை விடுதலைப் புலிகளும் மிகச்சரியாகக் கணித்திருப்பார்கள் என்றே தோன்றுகின்றது.



நந்திக்கடல் நோக்கி நகர்ந்த தமிழினத்தின் போரியல் வலு 2009இல் மாபெரும் கூட்டுக் கொலைகளின் ஊடாக அழிக்கப்பட்டதை உலகம் தனது வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்தது. எனினும் தமிழினத்தின் மீதான பன்னாட்டுக் குற்றங்கள் கட்டமைக்கப்பட்டு சுதந்திரத்தின் பின்னர் காலாதிகாலமாக நிகழ்த்தப்பட்டவை என்பதை தமிழர்களே உணரமுடியாததற்குக் காரணம் பன்னாட்டுக் குற்றங்கள் எவை என்பதை தமிழர்கள் கற்றுத் தேறாமல் இருப்பதே.

**பன்னாட்டுக் குற்றங்களைப் பற்றிப் பேசும் வகையிலேயே இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.**

பன்னாட்டு மனிதாபிமானச் சட்டம் மற்றும் பன்னாட்டு மனிதஉரிமைச் சட்டங்களின் சரத்துக்களை மீறும் எந்தவொரு செயலும் பன்னாட்டுக் குற்றமாகும்.

“பன்னாட்டுச் சட்டத்தினை மீறுகின்ற குற்றத்தினை புரிந்தவரின் மீது பன்னாட்டு சட்டத்தினைப் பிரயோகித்து குற்றவியல் பொறுப்பை நேரடியாக சுமத்தமுடியுமாயின் அச்செயல் பன்னாட்டுக் குற்றம்'' என தகைசார் பேராசிரியரும் கொசோவா விசேட அமர்வு நீதிபதியுமான கினியல் மெட்டராஸ் கூறுகின்றார். (பன்னாட்டுக் குற்றங்கள், பக்கம் 23)

உலகத்தில் வாழும் சமூகங்களிடையே நிகழ்த்தப்படும் அதி முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்கள் தொடர்பாகவே “பன்னாட்டுக் குற்றவியல் சட்டம்” தனது பங்களிப்பை நல்கின்றது என ஓப்பின் சொசைட்டி பௌண்டேசன் என்ற அமைப்பின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே எவை அந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த குற்றங்கள் என்ற கேள்வி எழுகின்றதல்லவா? அதனை வரையறையும் முயற்சியொன்று 19 ஆம் நூற்றாண்டில் உலகில் முதன் முதலாக ஆரம்பமானது.

இவ்வதிமுக்கியத்துவம் வாய்ந்த குற்றங்களை வரையறை செய்யும் முயற்சி 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பமானது. போர்க்களத்தில் படையினர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை வரையறை செய்த “ஹேக் பன்னாட்டு நடைமுறை வரைபு” முயற்சியினைஅம் முதலாவது முயற்சியாக குறிப்பிடலாம். இதன் பின்னரே பன்னாட்டுக் குற்றங்களை வரையறை செய்யும் முயற்சிகள் முழு முனைப்பாக நிகழத் தொடங்கின. அம் முயற்சிகளின் பயனாக பன்னாட்டுக் குற்றச் சட்டமானது ஆரம்பத்தில் மூன்று குற்றங்களை பன்னாட்டுக் குற்றங்களாக வரையறுத்தது. அவையாவன:

1. **மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்**
2. **போர்க்குற்றங்கள்**
3. **இனப்படுகொலை**

பின்னரான காலப்பகுதியில் நிகழ்ந்த மீளாய்வுகளில் இம்மூன்ற குற்றங்களுடன் ஆக்கிரமிப்பு ஓர் குற்றமாக இணைக்கப்பட்டு இன்று உலகில் பன்னாட்டுக் குற்றங்கள் என்பவை நான்காகப் பரிமளித்துள்ளன.

**1. மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் :**

உலகில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களின் தோற்றுவாயாக ஆர்மேனியாவில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இலங்கையில் இன ஒழிப்பு தொடர்வதற்கு எதிராக

# அனைவரும் அணிதிரளவேண்டும்!

### கஜேந்திரகுமார் - கம்மன்பில்லா விவகாரம் - ஒரு பார்வை.





பி.ஏ. காதர்

தமிழ் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு சர்ச்சைக்குரிய அரசியல்வாதி தான்.. ஒரு சிலரின் பார்வையில் அவர் ஒரு தமிழ் கம்மன்பிலா. ஒரு சிலருக்கு அவர் ஒருவர்தான் தமிழ் தேசியத்தை தாங்கி நிற்கும் ஒரே தலைவர். இன்னும் ஒரு சிலருடைய கருத்து 'தான் ஒருவன் தான் தமிழ் தேசியத்தை தங்கி நிற்கும் ஒரே தலைவன்' என அவர் நினைக்கிறார், ஆனால் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தைப் பற்றியோ தமிழ் மக்களின் ஐக்கியத்தைப்பற்றியோ அக்கறைப்படாத தனிநபர் ஆதிக்கவாதி' என்பதாகவே இருக்கின்றது. இதில் எந்த கருத்தின் பக்கமும் சாராமல் இப்போது நாம் அனைவரும் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பக்கம் நிற்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.



கஜேந்திரகுமார் - கம்மன்பில்லா பிரச்சினையை இரு தனி நபர்களின் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது. அப்படி பார்த்தால் அது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் உச்சமாகவே இருக்கும். கேள்வி இதுதான். கஜேந்திரகுமார் மீது கம்மன்பில்லா கும்பலுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்? இது என்ன இருவருக்கிடையிலான காணி சண்டையா, வேலி சண்டையா? இல்லையே. கஜேந்திரகுமார் முள்ளி வாய்க்கால் இனஒழிப்புக்கு பின்னர் தொடரும் கலாச்சார இனஒழிப்புக்கு எதிராக துணிந்து நிற்கிறார் குரல் எழுப்புகிறார் என்பது தானே! அவரது அரசியல் செயல்பாட்டில் மேலோங்கியுள்ள தனி நபர் போக்கை விமர்சிக்கலாம். அது எமது உள்வீட்டுப்பிரச்சினை. இப்போது கலாச்சார இன ஒழிப்புக்கு தலைமை தாங்கும் முக்கியமானவர்களில் ஒருவன் சாராம்சத்தில் 'நீ தமிழன்.. எமது அட்டூழியத்தைப் பற்றி பேசுவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது' என்று தானே கேட்கிறார், அச்சுறுத்து கிறார்.

இது கூட புரியாமல் நாம் இதனை இருவருக்குமிடையிலான தனிப்பட்ட பிரச்சினையாகக் கருதி கைகட்டி வேடிக்கை பார்த்தால், 'உனக்கு வேண்டும்' என்ற மனோ பாவத்தில் உள்ளூர மகிழ்ந்து மௌனம் காத்தால் 'இன்று இவருக்கு நாளை நமக்கு' என்று அன்று தந்தை செல்வா சொன்னதை நினைவு படுத்திக் கொள்ளவேண்டும். இந்த இனவாத நெருப்பை இப்போதே அணைக்காவிட்டால் நாளை இந்த பெருந்தேசியவாத நெருப்பு தொடரும் கலாச்சார இனஒழிப்புக்கு எதிராக எழும் அனைவரையுமே சுட்டு பொசுக்கிவிடும்.



அடுத்த கேள்வி, யார் இந்த கம்மன்பில்லா'? 'மோசடி மற்றும் ஊழலில் உலக சாதனைகளை முறியடித்த 'கம்மன்பில'! ரூ.780 மில்லியனுக்கும் அதிகமான சொத்துக்களை வாங்குகிறார்! மனைவியும் அவுஸ்திரேலியாவில். (*'Gammanpila' breaks world records in fraud and corruption! Purchases properties worth over Rs.780 million! Wife too in Australia'*) என்ற தலைப்பில் இவனது ஊழல்பற்றி லங்காஈ கட்டுரை 14.10.2017ல் எழுதியுள்ளது (பார்க்க *https://srilankatwo.wordpress.com/2017/10/14/gammanpila-breaks-world-records-in-fraud-and-corruption-purchases-properties-worth-over-rs-780-million-wife-too-in-australia-video/*). இவனது ஊழல் தொடர்பான மேலும் பல கட்டுரைகள் உள்ளன. தனது ஊழலை மறைப்பதற்கு 'சிங்கள இனவெறியைக் கக்கும் இந்த விஷமி தான் இப்போது இலங்கை நாடு முழுவதையும் தானே குத்தகை எடுத்துள்ளது போலவும், வேறு யாருக்கும், குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு, இந்நாட்டில் உரிமை கிடையாது. என்பது போலவும் பேசிவருகிறார். இதில் கேலிக்குரிய விடயம் என்னவென்றால் கஜேந்திரகுமாரை கொழும்பை விட்டு யாழ்ப்பாணம் போகச் சொல்லுகிறார். அப்படியானால் அவர் யாழ்ப்பாணம் இலங்கையில் இல்லை அது தமிழ் ஈழத்தில் இருக்கிறது என்று கூறுகிறாரா? அல்லது அவுஸ்திரேலிய பிரஜையான திரு சாதிக் என்பவருக்கு *Amsro Lanka Pvt Ltd.* கொம்பனியில் இருந்த பங்கை சட்டத்தரணி என்றமுறையில் போலி ஆவணம் தயாரித்து பல கோடி ரூபாய்களுக்கு விற்று மோசடி செய்ததைப்போன்று தன்னிடம் பணத்தோடு வந்தால் போலி ஆவணம் தயாரித்து தமிழீழத்தை எழுதி தருகிறேன் என்கிறாரா?

இப்படி கஜேந்திரகுமாரை எச்சரிக்க இவர் யார்? சிங்கள இனத்தை சேர்ந்த ஒருவன் என்றால் அவருக்கு இலங்கையில் வேறு சட்டம் இருக்கிறதா? அந்த சட்டம் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரை இனவாத ரீதியில் அச்சுறுத்த இடமளிக்கிறதா?

இவ்விவகாரத்தை இன்று நாம் அலட்சியம் செய்தால் நாளை எம்வீட்டுக் கதவும் தட்டப்படும். இன்று வடக்கு கிழக்கில் கலாச்சார இனஒழிப்பு பலவழிகளில் நடைபெறுகிறது. அது தொல்பொருள் ஆராய்ச்சி என்ற வடிவத்திலும் சிங்களவர் வாழாத பகுதிகளில் கூட பௌத்த விகாரைகளை நிறுவுவதன் மூலமும் இன்னும் பல்வேறு வடிவிலும் தொடர்கிறது. அதற்கெதிரான குரல்களை நசுக்கும் அரசின் ஒரு முயற்சியாகவே இதனைப் பார்க்கவேண்டும். இம்முயற்சியை முறியடிக்க நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும்.



இதற்கு சர்வதேச உதாரணங்கள் பல உள்ளன. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் கனடிய அரசாங்கம் பழங்குடி மக்களை அவர்கள் வாழும் பகுதிகளில் இருந்த பாடசாலைகளில் மத கலாச்சார திணிப்பின் மூலம் பழங்குடி மக்களை கட்டாய- இரண்டறக்கலப்பு (*assimilation*) செய்ய முற்பட்டபோது அரசின் அம்முயற்சியை வதிவிட பாடசாலை அறிஞர் ஜேம்ஸ் ஆர். மில்லர் மற்றும் பழங்குடியினத் தலைவர்கள் கலாச்சார இனப்படுகொலை (*cultural Genocide*) என விவரித்து அதற்கெதிராக குரல் கொடுக்கத் தொடங்கினர். இவ்வாறே போஸ்னியாவிலும் ஹெர்சகோவினாவிலும் (*Herzegovina*) கலாச்சார, மத பாரம்பரியத்தை அழித்தல், அவுஸ்திரேலியாவிலும் கனடாவிலும்பழங்குடியின குழந்தைகளை பலவந்தமாக அகற்றுதல் என்பன பழங்குடி மக்களின் கலாச்சார இனஒழிப்பாகவே கருதப்படுகிறது. இத்தகைய கலாச்சார இனஒழிப்பு தொடர்பான வழக்கொன்றில் மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

• • •

# மீறப்படும் மொழியுரிமை

துரைசாமி நடராஜா

இலங்கையில் தமிழும் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரச மற்றும் தனியார்துறை அலுவலகங்களில் தமிழ் மொழியில் தடையின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுதல் வேண்டும். எனினும் இதன் நடைமுறைத் தன்மை குறித்து நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. அதிலும் மலையகப் பகுதிகளில் பல அலுவலகங்களில் தமிழ் மொழியுரிமை பல்வேறு இடங்களிலும் மீறப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது பல்வேறு பாதக விளைவுகளுக்கும் உந்துசக்தியாக அமைந்துள்ளது. இந்நிலையில் மொழியுரிமை மீறப்படுமிடத்து அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு உரியவாறு அறிவித்து பரிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியது எம்மவர்களின் பொறுப்பாகும். இதிலிருந்தும் எவரும் விலகிச் செல்ல முற்படுதல் கூடாது.

எல்லா உயிர்களும் தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்கின்றன. என்றாலும் அவற்றின் தகவல் பரிமாற்றம் பழங்காலத்தில் எப்படி இருந்ததோ அப்படியே தற்காலத்திலும் இருக்கின்றது.இயல்பாக அமைந்துள்ள இந்த தகவல் தொடர்பு என்பது அவற்றின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு பெரிதும் உதவுகின்றது. மனிதன் தனது இயல்பான சைகை, பேச்சு என்ற நிலைகளைக் கடந்து தகவல் தொடர்புக்கென்று பல வழிமுறைகளை இப்போது கையாண்டு வருகின்றான். மனிதனின் கண்டுபிடிப்புகளுள் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக மொழி விளங்குகின்றது.மனித செயற்பாடுகளின் அச்சாணியாக மொழியே விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. மொழி மனித நடவடிக்கைகளை இலகுபடுத்துவதோடு கருத்துப் பரிமாற்றத்தின் அத்தியாவசிய ஊடகமாகத் திகழ்கின்றது. எனினும் மொழியுரிமையை உலகின் எல்லா சமூகங்களாலும் சரிவர அனுபவிக்க முடியவில்லை என்பது வேதனைக்குரியதாகும். இந்த வகையில் இலங்கையின் தமிழ் சமூகத்தை குறிப்பாக மலையக சமூகத்தை குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.



இலங்கைக்கும் மொழிக்குமிடையே பலமான பிணைப்பு இருக்கின்றது. மொழி ஆட்சியில் அமரப்போகும் அரசினை தீர்மானிக்கும் பிரதான சக்தியாக ஒரு காலத்தில் விளங்கி இருக்கின்றது. 1956 ம் ஆண்டு இலங்கையில் தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்திற்கு ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்தவர்கள்கூட பின்னர் அரசியல் இலாபங்களுக்காக தனிச்சிங்கள சட்டத்திற்கு வலுசேர்த்தமை யாவரும் அறிந்த விடயமாகும். தனிச்சிங்கள சட்டம் இலங்கையர்களின் விரிசல்களுக்கு வித்திட்டதோடு அரசதுறை தொழில் வாய்ப்புகளில் எம்மவர்களின் சதவீதம் கணிசமாக வீழ்ச்சி காண்பதற்கும் உந்துசக்தியாக விளங்கியது என்பதனையும் மறுப்பதற்கில்லை. தனிச்சிங்கள சட்டம் குறித்து பல்வேறு கருத்துக்கள் எதிரொலித்தன.

"சிறுபான்மையினரை வலிந்து சிங்கள மொழியை ஏற்கும்படி நிர்ப்பந்திப்பது இனக் கலவரத்துக்கு வழிவகுப்பதாக அமையும். இலங்கைக்கு மிகப்பெரிய ஆபத்து வரவுள்ளது. அம்மக்கள் தமக்கு அநியாயம் நடப்பதாக உணர்ந்தால் அவர்கள் நாட்டிலிருந்து பிரிந்து போகக்கூட தீர்மானிக்கலாம் "என்று லெஸ்லி மிகத் தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்தார்." மொழிகளின் சமஉரிமையை ஏற்றுக்கொள்ளுதல் எமது நாட்டின் சுதந்திரத்திற்கும் அதன் கூட்டு ஒற்றுமைக்கும் வழியாகும். இந்நிலையில் சிங்களம் மட்டும் சட்டம் எதிர்பாராத விளைவு களைத் தரும்". என்பது கொல்வின் ஆர்.டி.சில்வா வின் நிலைப்பாடாக இருந்தது.

### உச்சகட்ட ஆதிக்கம்

இதற்கமைய தனிச்சிங்கள சட்டம் இந்நாட்டில் பல்வேறு தாக்க விளைவுகளையும் ஏற்படுத்தி இனங்களுக்கிடையே விரிசல்கள் ஏற்படவும் வித்திட்டது. இந்நிலையில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் இதுபற்றி கூறுகையில், " தனிச் சிங்களம் எனும் கொள்கை இந்த நாட்டில் பொதுவாழ்க்கையில் தமிழ் மொழியை அதற்குரிய ஸ்தானத்தில் இருந்து வெறுமனே விலக்கிவைப்பதை மட்டும் கருதவில்லை. ஆனால் அது இந்த நாட்டின் தமிழ் மொழி பேசும் மக்களை இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசார வாழ்க்கை என்பவற்றிலிருந்தே வெளியே தள்ளி வைக்கிறது" என்று உள்ளம் குமுறி இருந்தார். மொழி உச்சகட்ட ஆதிக்கத்தை இலங்கையில் செலுத்தி இருந்தநிலையில் இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்னும் மறைந்ததாக இல்லை என்பதும் தெரிந்ததேயாகும்.



1987 ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதிகாரப் பரவலுக்கான அடிப்படையாக அரசியலுக்கு 13 ஆவது திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டு மாகாணசபை முறை உருவாக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாண ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இதனடிப்படையில் இன்று தமிழும் அரசகரும மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்றது. எனினும் பல இடங்களில் பெயரளவிலேயே தமிழ் அரசகரும மொழியாக காணப்படுகின்றதே தவிர மொழிப் பயன்பாடு என்பது குறைந்தே காணப்படுகின்றது. மலையகத்தில் இந்நிலைமை அதிகமுள்ளது.

அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் காணப்படும் பெயர்ப்பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டு " தமிழ்க் கொலை " இடம்பெற்றுள்ளது. பஸ் வண்டிகளின் பெயர்ப்பலகைகளிலும் இத்தகைய எழுத்துப் பிழைகளை அதிகமாக காணக்கூடியதாக உள்ளது. சில சந்தர்ப்பங்களில் கொச்சையான விரும்பத்தகாத சொற்பிரயோகங்கள் கையாளப்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது. இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் கையாண்டு பெயர்ப்பலகைகளில் எழுதுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வருதல் வேண்டும். இது குறித்த வழிகாட்டல்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஏனையோரும் வழங்கியுதவ முடியும். இலங்கையின் மலையகப் பகுதிகளில் சில கல்வி வலயங்களில் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் தனிச் சிங்கள மொழியிலேயே இடம்பெற்று வருவதாக ஏற்கனவே குற்றச்சாட்டுகள் பலவும் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனால் சிங்கள மொழிப் பரிச்சயமற்ற ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதுபோன்றே அதிபர்கள் கூட்டங்களும் சில வலயங்களில் தனிச்சிங்கள மொழியிலேயே இடம்பெற்று வருகின்றன. இதனால் அதிபர்களும் மொழி ரீதியான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.இந்நிலையானது பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் தாக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்பதையும் கூறியாக வேண்டும். இதேவேளை அதிபர் கூட்டங்கள் அல்லது செயலமர்வுகளின்போது சிங்களம் தெரிந்த ஒரு சில தமிழ் ஆசிரியர்கள், தமக்குதமிழ்மொழியில் விளக்கங்களை வழங்கத் தேவையில்லை என்று மேதாவித்தனமாக கூறி வருகின்றனர்.இந்த மேதாவித்தனத்தால் நமக்கு நாமே குழிதோண்டிக் கொள்ளும் ஒரு நிலையே ஏற்படும் என்பதே உண்மையாகும்.இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு மொழியுரிமைக்கு குரல் கொடுக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். இல்லையேல் விளைவுகள் விபரீதமாகும்.

### ஜனநாயகத்துக்கு முரண்

இதேவேளை அரச அலுவலகங்களில் இருந்து பொதுமக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அல்லது சுற்றுநிருபங்கள் என்பன தனிச்சிங்கள மொழியிலேயே காணப்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. இந்நிலையும் மோசமானதாகும். சிங்கள அல்லது ஆங்கில மொழியில் காணப்படும் கடிதங்கள் அல்லது சுறறுநிருபங்களுக்கான தமிழ் மொழி பெயர்ப்பு இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது தனித்தமிழில் கடிதங்கள், சுற்றுநிருபங்கள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இதைவிடுத்து தமிழர்களுக்கு சிங்கள அல்லது ஆங்கில மொழியில் கடிதங்கள் மற்றும் சுற்றுநிருபங்களை அனுப்புவதன் மூலம் அவர்களின் மொழியுரிமையை பறித்தெடுப்பது ஜனநாயகத்துக்கு முரணான செயலாகும் என்பதனை ஒவ்வொருவரும் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.




தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# கல்லறையிலும் களவாடும் செல்லுலாய்டு வீரர்கள்

எதற்கெடுத்தாலும் அரசியல் தலைவர்களைக் குறைசொல்வதில் எனக்கு உடன்பாடில்லை. நாம் ஏமாளியாக இருக்கிறவரை, அரசியலில் அவர்கள் நடத்தும் கோமாளித்தனங்கள் முற்றுப் பெறப் போவதில்லை. அவர்களையே கவனித்துக் கொண்டிருப்பதைவிட, நம்முடைய சுயலட்சணம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள கண்ணாடியின்முன்நின்று நம்மை நாமே சரிபார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமென்று நினைக்கிறேன்.

சுட்டும் விரலால் எதிரியைக் காட்டிக் குற்றம் சொல்லும்போது மற்றும் மூன்று விரல்கள் உந்தன் மார்பைக் காட்டுதடா என்கிற 'சில நேரங்களில் சில மனிதர்கள்' திரைப்படப் பாடலை எழுதியவர் கண்ணதாசனா ஜெயகாந்தனா என்பது நினைவில்லை. ஆனால், அந்த வரிகள் எனக்குள் ஆழப் பதிந்திருக்கின்றன. அதிலிருக்கிற யதார்த்தம், எவராலும் மறுக்க முடியாதது.

ஜெயிலர் என்பது, ரஜினிகாந்த் என்கிற சூப்பர் ஸ்டாரின் திரைப்படம். படம் வெளியான நாலைந்து நாளிலேயே நூற்றுக்கணக்கான கோடிகளை அள்ளிவிட வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன், படத்துக்கான பிரமோஷன் என்கிற போர்வையில், நீண்ட நாட்களுக்குப் பிறகு, ரஜினியின் பிம்பம் மீண்டும் பிரமாண்டமாகக் கட்டமைக்கப்பட்டது. வழக்கம்போல ரஜினிகாந்த் ஒரு குட்டிக்கதையைச் சொல்லி விவாதத்தைக் கிளப்பியதுகூட, முதல் சில நாள் வசூல் வேட்டைக்கான வியாபாரத் தந்திரம் என்பதில் சந்தேகமேயில்லை.

ரஜினியின் அந்தத் திட்டமிட்ட தந்திரம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றிருப்பதை, ஜெயிலரின் முதல் நாள் வசூல் உறுதி செய்கிறது. உலகெங்கும், முதல்நாளில், ஜெயிலரின் வசூல், இந்திய மதிப்பில், 90 கோடி ரூபாய். அரசியல் பிரவேச காமெடிகளையெல்லாம் மீறி, ரஜினி என்கிற திரைக் கதாநாயகன் ரசிகர்களிடம் இப்போதும் செல்வாக்கு செலுத்துவதை முதல் நாள் வசூல் நிரூபித்திருக்கிறது.

ளில் வெளியாவது தான் தமிழ்த் திரையுலக வழக்கம். அந்த வழக்கத்துக்கு மாறாக, ஆகஸ்ட் 10ம் தேதி, வியாழக்கிழமையே ஜெயிலர் வெளியானது. வியாழக்கிழமை என்பது, நூறு சதவிகித வேலைநாள். அப்படியிருந்தும், தமிழ் நாட்டில் 23 கோடி, அண்டை மாநிலமான கர்நாடகத்தில் 11 கோடி, கேரளத்தில் 5 கோடி, ஆந்திரம் மற்றும் தெலுங்கானாவில் 10 கோடி – என்று அள்ளியிருக்கிறது ஜெயிலர். இந்தத் தென்னிந்திய வசூல் வேட்டையில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. அயல்நாடுகளில் ஜெயிலர் 40 கோடி வசூலித்திருப்பதுதான் வியப்பளிக்கிறது.

எட்டரைக் கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில், ரஜினியின் அதி தீவிர ரசிகர்களே லட்சக்கணக்கானோர் இருக்கக் கூடும். அப்படியிருந்தும் இங்கே 23 கோடி தான் முதல்நாள் வசூல். புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் வாழ்கிற தமிழர்களின் மொத்த எண்ணிக்கையே லட்சக்கணக்கில் தான் இருக்கும். அந்த நாடுகளில் வசூல், 40 கோடி. இந்த ஒப்பீடுதான் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

அயல்நாடுகளில் திரையரங்கக் கட்டணம் அதிகம் தான்! அதுபோதாதென்று, தமிழ்நாட்டைப் போலவே, உலகெங்கும், முதல் நாள் காட்சி என்கிற பெயரில் மேலதிகக் கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படியொரு திட்டமிட்ட வசூல் வேட்டை தான், 40 கோடி வசூலின் பின்னணி.

ஜெயிலர் ஒரு பிரமாண்ட வர்த்தகத் திரைப்படம் என்பதில் சந்தேகமேயில்லை. அதே சமயம், அந்தப் படம் வன்முறையை ஊக்குவிக்கிற விதத்தில் இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. காது அறுந்து விழுவது, ரத்தம் சொட்டச் சொட்ட வெட்டிவீழ்த்தப் படுகிற தலை - என்றெல்லாம் சகட்டுமேனிக்கு ரத்தம்.... ரத்தம்.... ரத்தம்!

ரஜினிகாந்த் என்கிற நடிகரை, ஒரு தனி மனித ராணுவமாகச் சித்தரிக்கிறது ஜெயிலர்.



இயக்குனர்
புகழேந்தி தங்கராஜ்



இந்தப் புள்ளிவிவரம், லட்சக்கணக்கான ரஜினி ரசிகர்களுக்கு மிகப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கலாம். ரஜினியின் இரண்டு மூன்று படங்கள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறாததாலும், அவரது அரசியல் நாடகம் அம்பலமானதாலும், நொந்துபோய்க் கிடந்தவர்கள் அவர்கள். நமக்கோ, ஜெயிலர் திரைப்பட வசூல் விவரங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன.

புதிய திரைப்படங்கள் வெள்ளிக்கிழமைக

உணர்ச்சிக் கொந்தளிப்பால் வெடித்துச் சிதறும் மாவீரராகக் காட்டுகிறது. தனது வழிகாட்டியான கன்னட நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்ட போது, அவரை மீட்க உதவுங்கள் – என்று மூத்த தலைவர் பழ. நெடுமாறனிடம் நேரில் வந்து கேட்டவர் அவர். திரைப்படங்களில் காட்டப்படுவதைப் போன்று நிஜமான வீரராக இருந்தால் ராஜ்குமாரை மீட்க ரஜினிகாந்த் மாதேஸ்வர மலைக்குப் போயிருக்க வேண்டும்

– என்றெல்லாம் அப்போது கிண்டலும் கேலியும் எழுந்ததுண்டு. அதையெல்லாம் விரிவாகப் பேச நான் விரும்பவில்லை. அது அவசியமுமில்லை. திரைப்படங்களில் வீரராகக் காட்டப்படுபவர், உண்மையிலேயே வீரராக இருக்க வேண்டுமென்கிற எதிர்பார்ப்பு நியாயமுமில்லை. அது 'நடிப்பு' என்கிற அற்புதமான கலை.

என்னுடைய கேள்வி வேறு! இது ரஜினிகாந்துக்கான கேள்வியில்லை. எம் தொப்புள் கொடி உறவுகளுக்கான கேள்வி. ஜெயிலர் என்கிற வன்முறை கலந்த ஒரு கமர்ஷியல் படத்தை அநியாயக் கட்டணம் கொடுத்தாவது முதல் நாளே பார்த்துவிட வேண்டுமென்கிற மனநிலை எந்த மாதிரியான மனநிலை? இப்படியொரு மனநிலைக்கு எப்படித் தள்ளப்பட்டீர்கள்? இதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

ரஜினி, கமல், விஜய், அஜீத் போன்ற செல்லுலாய்ட் வீரர்களுக்கும், ஈழத் தாய்மண்ணின் மாவீரர்களுக்கும் இருக்கிற வித்தியாசத்தை விவரிக்க வெறும் வார்த்தைகள் மட்டுமே போதாது. தங்கள் சொந்தத்தாய்மண்ணையும், அந்த மண்ணின் பூர்வகுடி மக்களான தமிழ் மக்களையும் காப்பாற்ற கழுத்தில் நச்சுக்குப்பியுடன் பேராண்மையுடன் உலவிக் கொண்டிருந்தார்கள் அந்த மாவீரர்கள். அவர்களைக் காட்டிலும் ரஜினிகாந்த் போன்ற சினிமா நடிகர்கள் எந்த விதத்தில் உயர்ந்தவர்கள் என்பதையும், இத்தகையவர்களுக்காக பணத்தைக் கொட்டிக் கொடுப்பது அறிவுடைமையா என்பதையும் எமது தொப்புள் கொடி உறவுகள் இனியாவது சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

ஜெயிலர் போன்ற படங்கள், மனத்தில் அன்பையும் மனித நேயத்தையும் பதிக்கும் FEEL GOOD MOVIE கிடையாது. இவற்றைப் பொழுதுபோக்குப் படமாகவும் எடுத்துக் கொள்ள முடியாது. காதலிக்க நேரமில்லை, அன்பே வா – போன்றவை நூறு சதவிகித பொழுதுபோக்குப் படங்கள். ஜெயிலர் போன்றவை அப்படியல்ல! இவை, குறிப்பிட்ட ஒரு நடிகரின் பிம்பத்தை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்க சிறிலங்கா அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது



பல தசாப்தங்களாக இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஒரு பாரதூரமான மனித உரிமை மீறலாகும். ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டின் படி இலங்கையில் 60,000 முதல் 100,000 வரையான தமிழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தீர்க்கப்படாத மனித உரிமை மீறல்களாக உள்ளது. அவற்றில் பெரும்பாலானவை ஆயுதப் போரின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக அரசபடைகளால் நிகழ்த்தப்பட்டவையாகக் கணிப் பிடப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது அரச படைகளால் அல்லது அரசின் அங்கீகாரம், ஆதரவு அல்லது ஒப்புதலுடன் செயல்படும் ஒட்டுக்குழுக்களினால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்படுதல் ஆகும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் கொடூரமான சித்திரவதை, மற்றும் பிற வகையான வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள். நியாயமான விசாரணைக்கான உரிமையும், நிரபராதிகள் எனக் கருதப்படும் உரிமையும் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.




இலங்கை அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக் கூறாமல், தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. போர்க் குற்றவாளிகளை வெளிநாட்டு தூதுவர்களாக நியமிப்பதன் மூலம் அவர்களை பாதுகாக்க முயலுகின்றது. மனித உரிமைக் குழுக்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நீதி கோரி பல கோரிக்கைகளை முன்வைத்த போதிலும், குற்றவாளிகளை விசாரிக்கவோ அல்லது தண்டிக்கவோ எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்காமல் இலங்கை அரசாங்கம் நழுவல்போக்கையே கடைப்பிடிக்கிறது.

2015 இல், கண்துடைப்பிற்காக இலங்கை அரசாங்கம் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்தை (OMP) நிறுவியது. இருப்பினும், OMP அலுவலகத்தின் மீது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு சிறுதுளி நம்பிக்கைகூட இல்லை. குற்றம் இழைத்தவர்களாலேயே குற்றங்களை விசாரிப்பதற்கு நம்பகத்தன்மை அற்றவர்களாவர். இலங்கை அரசால் சர்வதேசத்தை நம்பவைப் பதற்காக நிறுவப்பட்டதே காணாமல் ஆக்கப் பட்டோருக்கான அலுவலகமாகும். வழக்குகளைத் தீர்ப்பதில் இவ்வலுவலகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதையும் செய்யத்தவறியதற்காகவும் சர்வதேசத்தால் விமர்சிக்கப்படுகிறது.

**ஸ்ரிவன் புஸ்பராஜா. க**
**அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை**

2022 இல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (UNHRC) வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும் எனவும் இத்தீர்மானம் கோரியிருந்தது.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்ததுடன்,




இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து ஒத்துழைக்க மறுத்துவருகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருவது இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையின் இனவாத பக்கசார்பான செயற்பாடானது தொடர்ந்து வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத ஒரு கறையாகும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர் சுழற்சி முறையிலான போராட்டம் ஈழத்தில் 2400 நாட்களை கடந்து இன்றும் தொடர்ச் சியாக நடைபெற்று வருகின்றது. 180ற்கு மேற்பட்ட சொந்தங்கள் அவர்களின் தொலைந்தவர் கிடைக்காமாலே இறந்துவிட்டனர். ஈழத்தமிழர் விடயத்தில் சர்வதேசம் பாராமுகமாகவே செயற்படுகிறது. தங்கள் நலன் சார்ந்து ஆதிக்கப் போட்டியில் செயற்படும் சர்வதேச நாடுகளும் அவர்களுக்கு துதிபாடும் ஐநா சபையும் வலிந்துகாணமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஒரு நீதியைத் தேடித்தருவார்களா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

**இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு காண செய்யக் கூடிய சில விடயங்கள் இங்கே:**

- **இலங்கை அரசாங்கத்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சொந்தங்களுக்கு நீதிவழங் கும் வகையில் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற பொறி முறையை சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கி நிறுவ வேண்டும்.**

- **பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும்.**

- **குற்றவாளிகள் தங்கள் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படுவதை உறுதி செய்வதன் மூலம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வழங்கப்படும் சாட்சியங்களைப் பாதுகாக்கும் பொறிமுறையை சர்வதேச நாடுகள் உருவாக்க வேண்டும்.**

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பல வருடங்களாக நீதிக்காக காத்திருக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு சர்வதேசத்தின் தலையீட்டுடன் தீர்வுகாணவும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்குவதற்கும் இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் இது.

• • •

# ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்கும் ஆற்றலை பிரிக்ஸ் (BRICS) அமைப்பு கொண்டிருக்கிறதா?

**இறுதிப் பாகம்**

### டொலருக்கு மாற்றீடான பணப்பரிமாற்றம்

அமெரிக்க டொலருக்கு மாற்றீடான ஒரு நிதிக்கட்டமைப்பை உருவாக்குவதே பிரிக்ஸ் நாடுகளின் அடிப்படை நோக்கமாகும்.

2015ம் ஆண்டு, அந்த நேரத்தில் 'பிரிக்ஸ் அபிவிருத்தி வங்கி' (BRICS Development Bank) என அழைக்கப்பட்ட புதிய அபிவிருத்தி வங்கி (New Development Bank), சீனாவின் ஷங்காய் (Shanghai) நகரத்தைத் தலைமையகமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அபிவிருத்திக்குத் தேவையான நிதியைத் தாங்களே கட்டுப்படுத்துவதற்கும், இரண்டாம் உலகப் போரின் முடிவில் நிறுவப்பட்ட அமெரிக்காவின் தலைமையில் இயங்கும் உலக நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றுக்கு மாற்றீடாகவும் இந்த வங்கி தாபிக்கப்பட்டது.



இந்தச் செயற்பாடு சரியான இலக்கைக் கொண்டிருந்ததாகவும், பூகோள ரீதியாக இயங்கு கின்ற நிதி நிறுவனக் கட்டமைப்பைக்கு தென் பூகோளம் சவாலாக இயங்க முடியும் என்பதையும் நிரூபித்ததாக, சீனா மற்றும் ஆபிரிக்க நாடுகளை மையப்படுத்திய, தென் ஆபிரிக்க சிந்தனைக் குழாமாகிய பூகோள உரையாடலுக்கான நிறுவனம் (Institute for Global Diologue) என்ற அமைப்பைச் சார்ந்த ஒரு மூத்த ஆய்வாளரான சனுஷா நாயுடு (Sanusha Naidu) தெரிவித்தார்.

பிரிக்ஸ் நாடுகள், மேலதிகமாக 'பிரிக்ஸ் பே' ("BRICS pay") என்ற இன்னொரு ஒழுங் கமைப்பையும் கட்டமைத்து வந்திருக்கிறது. நாணயங்களை டொலருக்கு மாற்றாமல், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே நேரடியாகவே பணப் பரிமாற்றத்தைச் செய்ய இந்த ஒழுங்கமைப்பு உதவுகிறது. இருப்பினும், புதிய அபிவிருத்தி வங்கி தாபிக்கப்பட்டு, எட்டு வருடங்கள் ஏற்கனவே கடந்திருக்கின்ற போதிலும், இந்த அபிவிருத்தி வங்கி பெருமளவுக்கு டொலரிலேயே இன்னும் தங்கியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக் கின்றது. அதுமட்டுமன்றி அதன் முக்கிய தாபக உறுப்பினரான ரஷ்யா மீது, தற்போது விதிக்கப்பட் டிருக்கும் பொருண்மியத் தடைகளின் காரணமாக, இந்த நாணயத்தைத் தக்க வைப்பதில் கடும் சிரமங்களை அது சந்தித்து வருகிறது. பூகோள ரீதியாகப் பார்க்கும் போது, மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியைப் பொறுத்த வரையில், அமெரிக்க டொலர் அதன் 60 வீதப் பரிமாற்றத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.




**தமிழில்: ஜெயந்திரன்**

பிரிக்ஸ் நாணயம் தொடர்பாக அண்மைக் காலத்தில் அதிகமாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. ஆனால்தற்போதையஉச்சிமாநாட்டில்இவ்விடயம் பேசப்படமாட்டாது என்று தென் ஆபிரிக்கா ஏற்கனவே தெரிவித்திருக்கிறது. "டொலரிலிருந்து வெளியேற பிரிக்ஸ் நாடுகள் கூட்டாக எடுத்து வருகின்ற முயற்சிகள், டொலரை முற்று முழுதாகக் கைவிடுவதற்கான முயற்சிகள் அல்ல. அதற்கு மாறாக பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான இரு தரப்பு உறவுகளில் உள்நாட்டு நாணயங்களைப் பயன்படுத்துவதையே நோக்காகக் கொண்டவை" என்று ஜொஹன்னர்ஸ்பேர்க் (Johannesburg) நகரில் அமைந்துள்ள, பன்னாட்டு விவகாரங்களுக்கான தென் ஆபிரிக்க அமைப்பில் ரஷ்ய-ஆபிரிக்க உறவுகளைக் கையாளுகின்ற மூத்த ஆய்வாளரான குஸ்தாவோ டி கர்வால்யோ (Gustavo de Carvalho) கருத்துத் தெரிவித்தார்.



இவ்விடயமாக இருந்தாலும் சரி அல்லது பிரிக்ஸ் அமைப்புடன் இணைய விரும்புகின்ற நாடுகளுக்குக் கொடுக்கப்படும் வாக்குறுதியாக இருந்தாலும் சரி, இதனை மிகவும் எளிதாக விளங்கிக்கொள்ளலாம். அமெரிக்கா பொருண்மியத் தடைகளை விதிக்கலாம் என்ற அச்சுறுத்தலுக்கு அப்பால், டொலரின் பெறுமதி அதிகரிக்கும் போது, வர்த்தகத்துக்கும் கடனை மீளச் செலுத்துவதற்கும் அமெரிக்க டொலரில் முற்று முழுதாகக் தங்கியிருப்பது அதிக செலவினத்தை ஏற்படுத்தக்கூடியது. 2020ம் ஆண்டிலிருந்து பூகோள ரீதியான நிதி நெருக்கடிகள் ஏற்படும் போது இவ்விடயம் அவதானிக்கப்படுகிறது.

டொலரில் தங்கியிருப்பதைத் தவிர்ப் பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது என்று கார்வால்யோ மேலும் கூறினார். அபிவிருத்தி நிதி வழங்கல் தொடர்பாகப் பெரிய முடிவுகளை எடுக்கும் போதும், உலக நாணய நிதியம் தொடர்பானமுடிவுகளைஎடுக்கும்போதும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இது சாதகமாக அமையும். உலக வங்கி தொடர்பாகவோ அல்லது உலக நாணய நிதியம் தொடர்பாகவோ, அவற்றில் உள்ள உறுப்பினர்கள் தொடர்பாக விடுக்கப்படும் கூட்டு அறிக்கைகளைப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பார்க்கும் போது, எந்த நாடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எந்த நாடுகள் செல்வாக்குச் செலுத்தவில்லை என்பதை உய்த்துணர முடியும்.

கடந்த காலத்தில், பிரிக்ஸ் நாடுகள் மேற்கொண்ட பிரகடனங்களைப் பார்க்கும் போது, மிகவும் பெரிய, செல்வாக்குச் செலுத்தும் பொருண்மியங்களாக இவை இருந்த போதிலும், இந்தப் பூகோள நிதி அமைப்புகளில் அவை செலுத்துகின்ற செல்வாக்கு வரையறுக்கப்பட்டது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

### எண்ணிக்கையில் பலம்

தங்கள் நாடு பிரிக்ஸ் குழுமத்துடன் இணைந்து கொள்ள விரும்புவதாகவும், அதே நேரம் 1.5 பில்லியன் டொலர்களை தமது பங்களிப்பாக குழுமத்தின் புதிய வங்கிக்குக் கொடுப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும், அல்ஜீரியாவின் அதிபரான அப்டெல்மஜீத் தெப்பூன (Abdelmadjid Tebboune) தெரிவித்தார். தம்மையும் இணைக்கும் படி எகிப்தும் இந்தக் குழுமத்தை ஜூன் மாதத்தில் கேட்டிருக்கிறது. கடந்த ஒரு வருடமாக, ஆர்ஜெந்தீனா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளும் இந்தக் குழுமத்தில் இணைந்துகொள்ளத் தமது விருப்பினை வெளிப்படுத்தியிருக்கும் நாடு களின் வரிசையில் இணைந்திருக்கின்றன. இவற் றோடு சனத்தொகையைப் பொறுத்தளவில் உலகில் நான்காவது இடத்தில் இருக்கின்ற இந் தோனேசியாவும், ஆபிரிக்காவின் மிகப்பெரிய பொருண்மியத்தைக் கொண்டிருக்கின்ற நைஜீரியா வும் உள்ளடங்குகின்றன.




இந்தக் குழுமத்தின் தலைமைப் பதவி யில் பாதுகாப்புடன் இருக்கின்ற சீனா, புதிய உறுப்பினர்களை இணைப்பது தொடர்பாக தனது உடன்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது. அதே நேரம் பன்னாட்டு நண்பர்களைக் கவர விரும்புகின்ற ரஷ்யாவும் குழுவில் புதிய அங்கத்தவர்களை இணைப்பது தொடர்பாக பச்சைக்கொடி காட்டியிருக்கிறது.

ஆனால் பிரிக்ஸ் அமைப்பு விரிவாக்கம் அடைவதற்கு ஏற்ப அது பலமாக இருக்குமா என்பதில் பல நாடுகள் சநதேகத்தை வெளிப் படுத்தியிருக்கின்றன.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

### சுவீடனிலும் ... தொடர்ச்சி ...

வாகன ஏற்றுமதித்துறையும் கடுமையாக பாதிப்படைந் துள்ளது. பல நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிகள் சுவீடனின் வாகன ஏற்றுமதியில் பாதிப் புக்களை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனில் ஏற்பட்டுள்ள போர் அதனை தொடர்ந்து ரஸ்யா மீதான பொருளாதாரத்தடைகள் என்பன உலக நாடுகளின் பொருளாதாரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும், ஐரோப்பிய நாடுகளே அதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

பின்லாந்து மற்றும் சுவீடன் என்பன நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு விண்ணப்பித்ததும், அதில் பின்லாந்து இணைந்துகொண்டதும், சுவீடன் அனுமதிக்காக காத்திருப்பதும் நாம் அறிந்ததே.

### மற்றுமொரு ... தொடர்ச்சி ...

அறிவிப்பு வெளிவந்ததும் பெருமளவான மக்கள் தமது மகிழ்சிகளை தெரிவித்து வீதிகளில் இறங்கி படையினருக்கு தமது ஆதரவுகளை தெரிவித்ததை பல ஊடகங்கள் ஒளிபரப்பியிருந்தன.

அண்மையில் நைகரில் இடம் பெற்ற படைத்துறை புரட்சியை தொடர்ந்து அந்த நாட்டை இழந்த பிரான்ஸ் தற்போது மற்று மொரு நாட்டையும் இழந்துள்ளது. மாலி, குனியா, புர்கினோ பசோ, சாட் மற்றும் நைகர் ஆகிய நாடுகளில் அண்மையில் இரா ணுவப்புரட்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தசம்பவம் தொடர்பில் சீனா, ரஸ்யா ஆகிய நாடுகள் கவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளபோதும், தேர்தல் முடிவுகள் மதிக்கப்பட வேண்டும் என பிரான்ஸ் கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

### இந்தியாவில்... தொடர்ச்சி ...

பைடன் வருகைதரவுள்ளார், எனவே இது சீன-அமெரிக்க தலை வர்கள் நேரிடையாக சந்திப்பதற்கு வழியை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் சீன அதிபரின் இந்த முடிவு அமெரிக்க அதிபரை அவர் சந்திக்க விரும்பவில்லை என்பதை புலப்படுத்துவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்தோனேசியாவில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டில் இரு தலைவர்களும் நேரிடையாக சந்தித்திருந்தனர்.

ஜி-20 மாநாட்டை தவிர்த்துள்ள ரஸ்ய அதிபர் தனக்கு பதிலாக வெளிவிவகார அமைச்சர் லாரோவை அனுப்ப திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட சீன அதிபர் ஜி-20 மாநாட்டை புறக்கணிக்கவுள்ளது குறிப் பிடத்தக்கது. பிரிக்ஸ் மாநாட்டில் இந்திய - சீன அதிபர்கள் இரு நாடுகளின் உறவுகள் குறித்து தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

### தனது பிரதேச ... தொடர்ச்சி ...

பிளற்றோ ஆகிய பிரதேசங்களை சீனா தனது நாட்டின் புதிய வரைபடத்தில் இணைத்துள்ளது.

இராஜதந்திர வழிகளின் ஊடாக நாம் சீனாவுக்கு எமது கடுமையன எதிர்ப்பை தெரி வித்துள்ளோம். சீனாவின் புதிய வரைபடத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளாது என இந்தியாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் அரின்டம் பக்சி தெரிவித்துள்ளார்.

சீனாவின் திட்டத்தை நிராகரித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், சீனா வரைபடத்தில் இணைத்துள்ளதால் இந்தியாவின் பிரதேசங்கள் சீனாவின் பகுதிகள் ஆகிவிடாது எனவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஹிமாலையா மலைப்பகுதியில் உள்ள அருணாச்சல பிரதேசத்தை திபெத்தின் தென்பகுதியுடன் இணைத்துள்ள சீனா, மேற்கு ஹிமாலையா மலைப்பகுதியில் உள்ள அக்சாய் சின் பகுதியையும் தன்னுடன் இணைத்துள்ளது. இந்த எல்லைப்பகுதி தொடர்பில் இரு நாடுகளும் 1962 ஆம் ஆண்டு போரில் ஈடுபட்டிருந்தன.

2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் எல்லைப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களை தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டிருந்தன. இந்த மோதலில் 20 இந்திய படையினரும், 4 சீன படையினரும் கொல்லப்பட்டிருந்தனர்.

### கல்லறையிலும் ... தொடர்ச்சி ...

பிரமாண்டமாகக் காட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவை. அந்த பிம்பத்தைக் காட்டி நம்மிடம் பிக் பாக்கெட் அடிப்பது ஒன்று தான் கொள்கை.

இத்தகைய படங்களைப் பார்க்கிற இளையோர், இத்தகைய வன்முறைகளின் பால் ஈர்க்கப்படலாம். அல்லது, இந்தப் பூவுலகு இத்துணை வன்மம் மிக்கதா என்கிற அச்சத்தில் கோழையாகலாம், இரண்டில் ஒன்று நிச்சயம். இதையெதற்காகக் கூடுதல் கட்டணம் கொடுத்துப் பார்க்க வேண்டும்?

ஜெயிலர் படத்துக்கு உங்கள் குழந்தைகளையும் அழைத்துச் சென்றீர்களா - என்கிற கேள்வியை, அயல்நாடுகளில் கூடுதல் கட்டணம் கொடுத்து ஜெயிலர் பார்த்த நண்பர்களிடம் எழுப்பிப் பாருங்கள். அப்படி அவர்கள் அழைத்துச் சென்றிருந்தால், அது சொந்தச் செலவில் சூனியம் வைக்கிற வேலை என்பதை எடுத்துச் சொல்லுங்கள். இனியாவது அவர்கள் திருந்தட்டும்!



2009ல் தமிழ்நாட்டிலிருந்து 26வது மைலில் இன அழிப்பு நடந்த சமயத்தில், சூப்பர் ஸ்டார்கள் என்று அழைக்கப்படுகிற இந்த நடிகர்களில் எவராவது தங்கள் திருவாயைத் திறந்து, ‘எடுடா கையை’ என்று ஒரே ஒரு வார்த்தையாவது பேசினார்களா? கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருந்த எமது உறவுகளைக் காக்க நடுத்தெருவில் வந்து நின்றார்களா? இன்று எங்கள் உறவுகளின் பணத்தில் கல்லா கட்டும் இவர்கள், அன்று கொத்துக் கொத்தாக மக்கள் செத்து விழுந்தபோது எங்கே போயிருந்தார்கள்?

இன்று திரையில் வன்முறை வெறியாட்டம் ஆடுகிற இவர்கள், எமது மக்களைக் காப்பாற்ற உயிரைப் பணயம் வைத்துப் போராடிய மாவீரர்கள் மீது ‘வன்முறையாளர்கள்’

### ஆக்கிரமிப்... தொடர்ச்சி ...

ஆக்கிரமிப்பிற்கு எதிர்வினை ஆற்ற ஒருங்கிணைய வேண்டும். பௌத்த பேரினவாத நிகழ்ச்சிகள் தமிழர் தாயக பிரதேசங்களை சிதைக்கும் வேலைத்திட்டங்களை அவர்கள் நிறுத்தும் வரை நமது எதிர்வினைகள் பலமிக்கதாக ஒருங்கிணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். நமது இன்றைய மௌனம் எதிர்கால சந்ததிக்கு செய்யும் பாரிய துரோகம் என்பதனை மனதிற் கொள்வோம். அரசியல் வேறுபாடுகளை தவிர்த்து இணைந்து பயணிப்போம்.

### மாலி மீதான ... தொடர்ச்சி ...

வில்லை, ரஸ்யா தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் அதனை நிராகரித்துள்ளது.

ரஸ்யாவின் இந்த நட வடிக்கையினால் மாலி மீதான அனைத்து தடைகளும் கடந்த வியாழக்கிழமையுடன் (31) முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

மாலியில் இடம்பெற்ற இரா ணுவப் புரட்சியை தொடர்ந்து அங்கிருந்த பிரான்ஸ் நாட்டு படையினர் முற்றாக வெளியேறியுள்ளனர். தற்போது அங்கு தங்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையினரும் எதிர்வரும் டிசம்பர் மாத இறுதியுடன் வெளியேறவேண்டும் என்ற காலக்கெடுவை புதிய அரசு விதித்துள்ளது. அங்கு 15,000 இற்கு மேற்பட்ட ஐ.நா படையினர் தங்கியுள்ளனர்.

என்று பச்சைக்குத்த முயன்ற இந்தியாவின் பச்சைத் துரோகத்தை எதிர்த்து மூச்சாவது விட்டார்களா? இத்தகைய கோழைகளுக்காக பணத்தைக் கொட்டிக்கொடுத்துத் திரையரங்கில் முட்டிமோதி நிற்கிற புலம்பெயர் உறவுகளிடம் நியாயம் கேட்டாக வேண்டும் என்கிற கொந்தளிப்போடுதான் இத்தனையையும் பேச வேண்டியிருக்கிறது.

தமிழ்த் திரையுலகுக்கு, புலம்பெயர் உறவுகளின் மணிபர்ஸ் மட்டுமே இலக்காக இருப்பது நியாயமில்லை. குற்றவுணர்வுடன் குறிப்பிடுகிறேன் இதை! வேறெந்த இனமாக இருந்தாலும், கூப்பிடுதொலைவில் தங்கள் சொந்த இனம் அழிக்கப்பட்டிருந்தால், அதற்கு நீதி கேட்கும் திரைப்படங்களை எடுத்துக் குவித்திருக்கும். தமிழின அழிப்புக்கு நீதி கேட்க, தமிழில் எத்தனைத் திரைப்படங்கள் வந்திருக்கின்றன? உங்கள் கல்லறையில் கூட களவாடுவோம் – என்கிற முடிவோடு வருகிற இத்தகைய நட்சத்திரங்களை ஊக்குவிக்கலாமா தமிழினம்!




இரண்டு நிலையில் இயங்குகிறது தமிழ் சினிமா. இரண்டுமே மோசடிதான்! ஒன்று, சூப்பர் ஸ்டார்களைக் காட்டி தமிழர்களிடம் கொள்ளையடிப்பது. அல்லது, கேப்டன் பிரபாகரன், தம்பி – என்றெல்லாம் நம் இதயத்தில் பொறிக்கப்பட்டிருக்கிற பெயர்களை படங்களின் பெயராக்கி, அந்தப் பெயர்களுக்குச் சிறிதும் பொருந்தாத கமர்ஷியல் குப்பைகளை, வன்முறைக் குப்பைகளை நம் தலையில் கட்டுவது. இன்னும் எவ்வளவு காலம்தான் இதையெல்லாம் கண்டும் காணாதவர்கள் போன்று நாம் இருக்கப் போகிறோம்!

• • •

## ஒரு புதிய ... தொடர்ச்சி ...

அமைப்பு பெரிதானால் தனது செல்வாக்கு குறைவடையலாம் என்று அஞ்சுகின்ற பிரேசில், அமைப்பை விரிவாக்கம் செய்வது தொடர்பாக இதுவரை தனது கருத்தை வெளிப்படுத்தவில்லை. விரிவாக்கம் இந்தக் குழுவை வேறொன்றாக மாற்றக்கூடும் என்று கடந்த ஆகஸ்ட் மாதத்தின் தொடக்கத்தில் பிரேசிலின் அதிகாரி ஒருவர் றொயிற்றேசுக்குத் தெரிவித்திருந்தார்.

அமைப்பு விரிவாக்கம் பெறுவதை இந்தியா அதிகம் விரும்பவில்லை என்று தெரிவித்த நாயுடு, அப்படி ஒரு முயற்சி எடுக்கப்பட்டால் அதனை இந்தியா தடுக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார். அதற்குப் பதிலாக அமைப்பில் ஏற்கனவே அங்கம் வகிக்கும் நாடுகள் முன்னரைவிட நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்றும் புதிதாக இணைய விரும்பும் நாடுகளுக்கான விதிமுறைகளை இயற்றி, அனுமதிப்பதற்கான காரணிகளை வரையறை செய்ய வேண்டும் என்றும் இந்தியா கேட்டிருக்கிறது.

புதிய அங்கத்தவர்களை இணைப்பதற்கு முன்னர் இந்தக் குழுமம் தனது இல்லத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று இந்தியா விரும்புவதாக நாயுடு கூறினார். குறிப்பாக இந்தியா, தங்களது நாட்டின் கிழக்கிலுள்ள லடக் பிரதேசத்தின் சர்ச்சைக்குரிய எல்லையில் மூன்று வருடங்களாகக் குவிக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் தொடர்பான பிரச்சினைக்கு ஒரு முடிவு எட்டப்படுவதை முக்கியமாகக் கருதுகிறது என்றார். ஆசியாவின் பெரும் நாடுகளுக்கிடையே உறவுகள் சுமூகமாக இல்லை என்று இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரான ஜெய்ஷங்கர் *(Jayshankar)* பல தடவைகள் கூறியிருக்கிறார்.

இது எவ்வாறிருப்பினும், இந்த உச்சி மாநாடு நடைபெறவுள்ள சூழலில், சீனா தனது அணுகுமுறையில் தற்போது மென்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும், இரண்டு தரப்பையும் சேர்ந்த இராணுவத் தளபதிகள் அமைதியைக் கடைப்பிடிக்க உறுதிபூண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த உச்சிமாநாடு நடைபெறும் அதே நேரத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் *(Narendra Modi)* சீன அதிபர் ஷீ ஜின்பிங்கும் *(Xi Jinping)* சந்திப்பார்களா என்பது இதுவரை உறுதியாகவில்லை. பிரிக்ஸ் அமைப்பின் மிகப்பெரிய இரு பொருண்மியங்கள் தமக்கிடையேயான உறவை எப்படிப் பேணுகின்றனவோ அதைப் பொறுத்தே இந்த அமைப்பின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதை எதிர்வுகூற முடியும்.

### 'ஒன்றில் இது அல்லது அது' என்பதல்ல

பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகள் அடிக்கடி சொல்வது போல, இந்த அமைப்பின் பலம் என்னவென்றால், மேற்குலகத்தைப் போலன்றி, மற்ற நாடுகள் தமக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதை இந்த அமைப்பு எதிர்பார்ப்பதில்லை.

எடுத்துக்காட்டாக, உள்நாட்டு நாணயத்தில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே வர்த்தகம் செய்வதா? அன்றேல், அல்லது டொலரில் அமெரிக்காவோடு வர்த்தகம் செய்வதா என்று ஒன்றை விடுத்து இன்னொன்றைத் தெரிவுசெய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற கர்வால்யோ கூறினார். இது உண்மையில் குறிப்பிட்ட ஒரு சில சந்தர்ப்பங்களில் சில நாடுகளால் பயன்படுத்தப்படக்கூடிய ஒரு தெரிவு ஆகும்.

"சுருக்கமாகச் சொல்வதாயின் அமெரிக்கத் தலைமை என்ற மாதிரியை எந்தவிதத்திலும் பாதிப்புக்கு உள்ளாக்காமல், அதற்குச் சமாந்தரமாகப் பொருண்மியரீதியாகவும் ராஜீகரீதியாகவும் பயன்படுத்தக்கூடிய தெரிவுகள் இவை என்பதே உண்மையாகும். இவ்வாறான எண்ணம், பூகோள அரசியல் மிகக் கடுமையாகப் பிளவுபட்டிருக்கும் தற்போதைய சூழலில், ஒரு சில நாடுகளைப் பொறுத்தவரையில் புரிந்துகொள்வதற்குக் கடினமானதாக இருக்கலாம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரிக்ஸ் அமைப்பு தவறாகப் புரிந்துகொள்ளப்படுவது இது முதல் தடவை அல்ல. முதல் தடவையாக 2009ம் ஆண்டில் பிரிக்ஸ் அமைப்பு உருவாக்கப்பட்ட போது, அதிலே கலந்துகொண்டு மேற்குலக ராஜதந்திரிகள் அதனை ஒரு பொருட்டாகக் கருதியிருக்கவில்லை என்பதை டி கார் வால்யோ நினைவுகூர்ந்தார்.

'மேற்குலகத்துக்கு எதிரான வகையில் சீனாவுக்குச் சேவகம் செய்யும் ஒரு அமைப்பே பிரிக்ஸ்' என்ற பார்வையே மேற்குலகில் தற்போது பலமாக இருக்கிறது. இரண்டு தடவைகளும் மேற்குலகம் தவறிழைத்திருக்கிறது என்று அவர் கூறினார்.

உண்மையில் பூகோள ரீதியாக ஒரு மனப்பாங்கு பலமாக வளர்ந்துவருகிறது. அதனையே பிரிக்ஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதாவது "மேசையில் நாங்களும் அமர விரும்புகிறோம்" என்பதாகும். படிப்படியாகப் பலமாகிக் கொண்டு வருகின்ற இந்தக் குரலை இனங்கண்டு, மேற்குலகம் அதற்குச் செவிமடுக்க வேண்டிய காலம் கனிந்துகொண்டிருக்கிறது.

**நன்றி: அல்ஜஸீரா**

## ஈழத் தமிழின ... தொடர்ச்சி ...

ஓட்டோமான் பேரரசால் தனது மக்களையே படுகொலை செய்த நிகழ்வு பதிவாகியுள்ளது. என்றாலும் சுமார் பதினைந்து இலட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்ட அந்த நிகழ்வு நிகழ்ந்த முதலாம் உலக மகா யுத்த காலப் பகுதியான 1900களின் ஆரம்பப் பகுதியில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் உட்பட எந்தவொரு குற்றமும் பன்னாட்டுக் குற்றமாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.

இப்போது இரண்டாம் உலக யுத்தமும் நிறைவு பெற்றுவிட்டது. நவம்பர் 1945இல் இரண்டாம் உலகப்போரின் போது நாஸிப் படைகளால் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களை பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பதற்காக வென நியூரம்பேர்க் இராணுவத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டது. அத்தீர்ப்பாயத்தின் முன் ஆர்மேனியப் படுகொலைகள் தொடர்பாகவும் விசாரணைகளை நிகழ்த்துமாறு கேட்கப்பட்டது.

இரண்டாம்உலகப்போரில்நிகழ்த்தப்பட்ட இராணுவக் குற்றங்களை ஆராய நியமிக்கப்பட்ட நியூரம்பேர்க் இராணுவத் தீர்ப்பாயம் அப்போரில் நிகழ்த்தப்படாத ஆர்மேனியப் படுகொலைகளை விசாரணைக்குட்படுத்த வேண்டுமாயின் போரில் நிகழாத அப்படுகொலைகளுக்கு ஒரு பெயரையும் அதற்கொரு வியாக்கியானத்தையும் முன்வைக்க வேண்டிய தேவை எழுந்தது. அதன்படி இத்தீர்ப்பாயமே "மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்" என்றால் எவ்வாறு வரையறுத்துக்கொள்ள வேண்டும்; என்பதனை முதன்முதலில் வியாக்கியானித்தது.

தொடரும்

## இலங்கையில் ... தொடர்ச்சி ...

பார்வையிட்டுள்ளார்.

மலையகம் சென்று அங்கு மக்களை சந்தித்ததுடன், மலையக மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு அமெரிக்கா உறுதுணை வழங்கும் என தெரிவித்துள்ளதுடன், கண்டி சென்று இலங்கை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் சந்தித்துள்ளார்.

இன மற்றும் மத சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும் என கொழும்பில் சந்தித்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர், அனைத்துலக காணாமல்போனோர் தினத்தில் இலங்கையில் காணாமல்போன மக்களின் உறவினர்களின் துன்பங்களில் அமெரிக்கா பங்கெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்றால் அங்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## குறைந்த விலை ... தொடர்ச்சி ...

விலையில் விற்பனை செய்கின்றது.

இலங்கையில் வெள்நாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் சந்தைவாய்ப்பை வழங்குவது என்று இலங்கை அரசு கடந்த வருடம் தீர்மானித்தபின்னர் சீனா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் இந்திய நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தியாவின் நிறுவனங்கள் ஏற்கனவே இயங்கிவரும் நிலையில் சீனா தற்போது தனது பணியை ஆரம்பித்துள்ளது. இலங்கையின் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்தல், நீண்டகாலதிற்கான வழங் கலை உறுதி செய்தல் போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் சீனா நிறுவனத்திற்கு 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான 20 ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 50 நிலையங்களை சீனா புதிதாக அமைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எண்ணைக்களஞ்சியங்களில் சேமிக்கப்படும் எண்ணையை சீனா பயன்படுத்த தீர்மானித்துள்ளதால் எதிர்காலத்தில் இலங்கையில் எரிபொருள் நெருக்கடியை இல்லாது செய்து அதன் மூலம் ஏற்படும் அரசியல் அழுத்தங்களை கட்டுப்படுத்த சீனா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வடமாகாணத்திலும் 7 நிலையங்களை அமைக்க அது திட்டமிட்டுள்ளது.

## மீறப்படும் ... தொடர்ச்சி ...

மொழியுரிமை என்பது மிகவும் முக்கியமானதாக கருதப்படும் நிலையில் எந்த சூழ்நிலையிலும் நாம் அதனை விட்டுக் கொடுப்பதற்கு முயற்சித்தலாகாது." தமிழ் என்பது எமது உயிருக்குநேர்" என்பதுகவிஞர்களின்கருத்தாகும். எனவே ஏதேனும் ஒருநிலையில் மொழியுரிமை மீறப்படும்சந்தர்ப்பங்களில் அதனை நாம் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிகாரத்தை பெற்றுக் கொள்ள முற்படுதல் வேண்டும். காலஞ்சென்ற பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் தலைவராக இருந்த காலப்பகுதியில், மலையகத்தில் இருந்து மொழியுரிமை மீறல்கள் தொடர்பில் வரும் முறைப்பாடுகள் குறைவாகவே இருப்பதாக குறைபட்டுக் கொண்டார். எனினும் மலையகத்திலேயே அதிகமான மொழியுரிமை மீறல்கள் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டி இருந்தார். இதேவேளை மொழியுரிமை மீறப்படுமிடத்து எந்தளவுக்கு தாக்க விளைவுகள் ஏற்படும் என்பதனையும் பேராசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்நிலையில் தொடர்ந்தும் நாம் மொழியுரிமை மீறல்களுக்கு இடமளிக்காது உரியவாறு குரல்கொடுத்து மொழியுரிமையை நிலைநாட்டிக் கொள்ள முற்படுதல் வேண்டும்.

• • •

# இளையோரே சிகரம் நீங்கள்

# உயர்ந்த மதிப்பீடுகளால் உயர்வாக வாழ்வோம்

கவிதா ஆல்பர்ட்

மதிப்பீடு என்பது ஓர் உன்னதமான அளவுகோல். அது நமது எண்ணங்களாலும் செயற்பாடுகளாலும் உருவாகும் நற்சான்றிதழ். நாம் எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பதை விட, எப்படி வாழ்ந்தோம் என்பது தான் மிகவும் முக்கியம். நாம் மதிப்புமிக்கவர்களாக வாழ்வதில் தான் வரலாறு பெருமை கொள்கிறது.

உன்னதமான கடவுள், மதிப்புமிக்கவர்களாகவே மனிதர்களை உருவாக்கினார். ஆனால் நமது எண்ணங்களில் எதிர்மறை உணர்வுகள் எதிரொலித்த போது, கருத்து பேதங்களும், முரண்பாடுகளும் எதிர் வந்தன. சண்டைகளும் சச்சரவுகளும் நம்மைக் களவாடிக் கொண்டன.

எப்போது நாம் மதிப்புமிக்கவர்கள் எனக் கருதுகின்றோமோ அப்போது மற்றவர்களும் மதிப்புமிக்கவர்களாகத் தான் இருப்பார்கள் என்கிற எண்ணம் உருவாகும். அனைவரையும் மதிப்புமிக்கவர்களாக மாற்ற வேண்டும் என்பது தான் நமது உள்ளத்து அதிர்வுகளாக அலைமோதிக் கொண்டிருக்கும்.



சுயநலகூட்டுக்குள்புகுந்துகொண்டிருக்கும் உலகம், தனது மதிப்பை உணர்ந்துகொள்ள நேரமில்லாமல் எதையெதையோ தேடி ஓடிக் கொண்டிருக்கிறது. எதற்கும் நேரமில்லை என்கிற நெருக்கடியான நிலைக்கு அவர்கள் தள்ளப் பட்டுள்ளனர். எதற்காக ஓடுகிறோம்? முடிவில் எதைக் கொண்டுவரப்போகிறோம்? அதைக் கொண்டுவருவதால் நமக்கு முழுமை ஏற்பட்டு விடுமா என்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் தேடும் நிலையில் அவர்கள் இருப்பதில்லை. ஓடுகின்றனர், ஓடுகின்றனர், ஓடிக்கொண்டே இருக்கின்றனர். களைப்படைந்து நிற்கிறபோது தான் பல மதிப்பான பொருட்களும், உதவிகளும் தங்களுக்குத் தேவை என்பதை உணர்கின்றனர்.



பல நேரங்களில் அந்த நெருக்கடியான நிலையில், மதிப்புமிக்கவை நமக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றன. அப்போது தான் நமது பலவீனம் நமக்குப் புரிகிறது. மதிப்பு மிக்க நமது ஆற்றலை, செயலாற்றலாக நாம் மாற்றத் தவறியதன் விளைவு தான் இது என்பதை உணரும் போது, அதற்குப் பெயர் விதி என்று விளக்கம் கொடுக்கிறோம்.

இளையோரே, நீங்கள் மதிப்புமிக்கவர்கள். எதிர்கால வரலாற்று நாயகர்கள். நிகழ்கால ஓட்டத்தில் நீதியுடன் நடந்து வெற்றியைப் பெற வேண்டிய வீராங்கனைகள் நீங்கள். உங்களை நீங்கள் நம்ப வேண்டும். அப்போது தான் நீங்கள் உங்கள் மகத்தான ஆற்றலை உணரமுடியும்.

வாழ்க்கையில் ஒவ்வொன்றுக்கும் தெளிவான பதிலும், பாதையும் உண்டு. உங்களது இலட்சியப் பயணத்தில், தடை ஏற்படும் போது, நீங்கள் தாங்க முடியாமல் உங்கள் வாழ்க்கையை முடிக்க வேண்டும் என்று நீங்கள் கருதினால், அது மிகவும் முட்டாள் தனமான ஒரு முடிவாகவே இருக்கும்.

உயிர் உன்னதமானது. மதிப்புமிக்கது. உலகத்தில் பிறந்த நாம் ஒருமுறை தான் உயிருடன் வாழ முடியும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் மிக மிகக் குறைவு. இதில் நாம் போட வேண்டிய கோல்கள் பல உள்ளன. ஒருமுறை ஒரு கோல் போடத் தவறிவிட்டால், கோல் போடும் வாய்ப்பு முடிந்துவிட்டது என்று ஏன் கருதுகிறீர்கள்? நமக்கு இந்த உலகில் நிரந்தரமாக விருப்பமானது என்று எதுவும் இல்லை. ஒருமுறை விருப்பம் தரக்கூடியதாக இருப்பது மறுமுறை விரும்பத்தகாததாக மாறலாம். அது நமது எண்ணத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் பொறுத்து மாறுபடக்கூடியது.

மதிப்புமிக்கவர்களாகத் தங்களை எண்ணிக் கொள்பவர்கள், ஒருபோதும் தங்களது மகத்தான உயிரை அழித்துக்கொள்ள எண்ணமாட்டார்கள். மிரண்டு பிடிக்கும் குணத்தை மாற்றி, பக்குவமடைந்தவர்களாக, தெளிந்த எண்ணத்தோடு முடிவெடுக்கும் ஆற்றல் உள்ளவர்கள் தான் உலகில் மிகவும் மதிப்புமிக்கவர்கள்.

அத்தகையவர்களால் தான் இந்த உலகம், மதிப்புமிக்க சாதனைகளை உருவாக்கவும் முடியும். மதிப்புமிக்க மாமனிதர்களை உருவாக்கவும் முடியும். முதிர்ச்சி என்கிற பக்குவம் தான் நம்மை மிக உன்னதமான நிலைக்கு அழைத்துச் செல்லும். தோல்விகள் கூட அவர்களுக்கு வண்ணம் தீட்டும் தூரிகைகளாக மாறிவிடும்.



கண்ணீர்த்துளியின் வடிவத்தில் காட்சிதரும் இலங்கை மண் சுமந்த கண்ணீர்த்துளிகளினால் தான் கடல் உப்பானதோ என்ற எண்ணுமளவுக்கு, வலிகளைச் சுமந்த வாழ்க்கை வரலாற்றை இலங்கை மண் பதிவுசெய்து வைத்துள்ளது. புலம்பெயர் தமிழர் வாழ்வில் சோகங்களும் சோதனைகளும் ஏராளம். பலர் அதனை மறந்து வாழ்ந்தாலும், அழியாத வடுக்களாகத் தான் அவை இன்னமும் இதயத்தில் இரணங்களாக இருக்கின்றன.

ஆயினும் வலியையும் துன்பங்களையும் துடைத்தெறிந்து, வண்ணத் தூரிகைகளாக வலம் வந்துகொண்டிருக்கும் எண்ணற்ற ஈழத் தமிழர்களின் வாழ்வில், வாழ்க்கை மதிப்புமிக்கது. அதை எப்படியும் வாழ்ந்தே ஆகவேண்டும் என்கிற புதிய நம்பிக்கையை நமக்குக் கற்றுத்தருகிறது.

கற்றுத்தருகின்ற பாடங்கள் நமது எதிர் காலத்தை நாம் செதுக்க உதவும் சிற்றுளிகள் என்பதை நாம் உணர வேண்டும். அழுவதும், அழிவதும் பலவீனம் என்பதை நாம் உணர்ந்து, விழுந்தாலும் எழுந்து, ஓடி வெற்றிப் பதக்கத்தை அடைவது தான் நமது இலக்காக இருக்க வேண்டும்.



ஆகவே எம் இனிய இளையோரே, இளமை கடவுளால்உங்களுக்குவழங்கப்பட்டவசந்தகாலம். அந்த வசந்த காலத்தின் வனப்புகளையும், சுகத்தையும் நீங்கள் கண்டடைவதே இயற்கையும் இறைவனும் உங்களுக்கு வைத்திருக்கின்ற சவால். சவால்களைச் சாதுர்யமாக வென்று காட்டும் வலிமையும், சிந்தனைத் திறனும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.



எனவே வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் சலிப்படையாதீர்கள். எல்லாம் முடிந்துவிட்டது போன்ற எண்ணம் ஒருபோதும் உங்கள் ஆழ்மனதுக்குள் நுழைய விடாதீர்கள். நீங்கள் எண்ணுவதை விடப் பலநேரங்களில் கடவுள் கொடுக்கும் பரிசு மிக உன்னதமானதாக இருக்கும். ஆகவே பெற்றுக்கொண்டதில் நிறைவடையுங்கள். உயர்ந்த மதிப்பீடுகளால் உயர்வாக வாழ்வோம் என்று சபதம் ஏற்போம்.

**தொடரும்.**